வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 27.09.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 282 | பக்கங்கள் : 16










படங்கள் - ஐ. சிவசாந்தன்

# தாயகமெங்கும் திலீபனுக்கு எழுச்சி நினைவேந்தல்கள்!

■ *நல்லூரில் போட்டிகள் - குழப்பங்கள் தாராளம்!*

நல்லூர், செப்ரெம்பர் 27

தியாக தீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று தமிழ் பேசும் மக்களின் தாயகம் எங்கும் பேரெழுச்சியாக கடைப்பிடிக்கப்பட்டது. பிரதான நினைவேந்தல் நடைபெற்ற நல்லூரில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நினைவேந்தல் நிகழ்வை தனித்து முன்னெடுத்து சென்றனர். இதையடுத்து குழப்பங்கள் இடம்பெற்றன. எனினும், இந்தக் குழப்பங்களுக்கு மத்தியிலும் பெருமளவான மக்கள், மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், அரசியல்வாதிகள் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். 15



## கொழும்பிலும் திலீபனுக்கு நினைவேந்தல்!

கொழும்பு, செப். 27

தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று கொழும்பு மருதானையிலும் இடம் பெற்றது. 15

## ஐ. எம். எவ்வின் உதவி எப்போது கிடைக்கும்?

கொழும்பு, செப். 27

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைப்பதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்கள் ஆகலாம் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு நிதி வழங்கிய நாடுகளுடனான சந்திப்பின் போது அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு நிதி உதவி வழங்கிய நாடுகளிடமிருந்து 15

## மதுபான போதைக்கு பதிலாக ஓடிக்கொலன் குடித்தவர் பலி!

யாழ்ப்பாணம், செப். 27

மதுபான வகை விலை உயர்ந்ததால், அதற்குப் பதிலாக ஓடிக்கொலனை குடித்து வந்தவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் அந்த நபர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர், யாழ்ப்பாணம், புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு திருக்குமரன் (வயது 54) என்பவராவார்.

மனைவியை பிரிந்து வாழ்ந்து வருகிறார். இந் நிலையில், குடிக்கு அடிமையாகியுள்ளார். இந் நிலையில், தற்போது ஏற்பட் 15

## பௌத்த வழிபாடுகளுக்கு தடை தமிழர் வெட்கப்பட வேண்டுமாம்!

*இப்படி சொல்கிறார் சரத் வீரசேகர*

கொழும்பு, செப். 27

“நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத் தப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் குருந்தூர்மலையில் பௌத்த மத வழிபாடுகளுக்கு தடை ஏற்படுத் தப்பட் டுள்ளமைக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் வெட்கப்பட வேண்டும். சிங்களவர்களுக்கு பொறுமையுண்டு. இனவாத செயல்பாடுகளில் ஈடுபடுவதை தமிழ் அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்ளாவிடின் சட்ட நடவடிக்கை எடுப்போம்”,

இப்படி கூறியிருக்கிறார் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் 15

## ஈரான் அரசாங்கத்திடமிருந்து நேரடியாக கச்சா எண்ணெய்!

*வெளிவிவகார அமைச்சர்*

கொழும்பு, செப். 27

ஈரான் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் நேரடியாக ஒப்பந்தம் ஒன்றை செய்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்துக்கு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர், அங்கு ஈரான் பிரதமரை சந்தித்துக் கலந்துரையாடி 15

## புதிய கூட்டணி மூலம் ஆட்சியை பிடிப்போம்!

*சுதந்திரக் கட்சி அறிவிப்பு*

கொழும்பு, செப். 27

நாட்டில் காணப்படுகின்ற முற்போக்கான அரசியல் கட்சிகளை இணைத்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைத்து, அதன் ஊடாக ஆட்சியமைக்க எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் 15



## சிறுநீரக நோயை கண்டறிய நடமாடும் ஆய்வுகூடங்கள்!

கொழும்பு, செப். 27

சிறுநீரக நோய் பரிசோதனைகளை மேற்கொள் வதற்காக நடமாடும் ஆய்வுகூடங்களுடன் கூடிய 8 வாகனங்கள் நேற்றுமுதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த வாகனங்கள் சீனாவால் வழங்கப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இந்த வருடம் தியாக தீபம் திலீபனின் நினைவஞ்சலி நிகழ்வுகள், தொடக்கத்திலிருந்து முடிவு வரை குழப்பங்களுடனேயே நடந்து முடிந்திருக்கின்றன.

இந்தக் குழப்பங்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்படும் ஓர் அரசியல் கட்சியின் தரப்பிலிருந்து, அதன் முக்கியஸ்தர் ஒருவரால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில்,

“அரச புலனாய்வாளர்களால் இயக்கப்படுபவர்களின் சதிகளைத் தாண்டி” திலீபன் நினைவுகூரப்பட்டதாகவும், “பொய்ச் செய்திகளைப் பரப்புவதில் அரச ஆதரவு ஊடகங்கள் தீவிரம்” காட்டுகின்றன எனவும் தெரிவித்திருக்கிறார்.

அந்த முக்கியஸ்தர் குறிப்பிடும் தரப்பினர் அரச புலனாய்வாளர்களால் இயக்கப்படுபவர்கள் எனின்,

பொய்ச் செய்திகளைப் பரப்புபவர்கள் அரச ஆதரவு ஊடகங்கள் எனின் - அவர்களுக்குத் திலீபனின் தியாகத்தின் பெறுமதி தெரியாதுதான்.

ஆனால், அதன் பெறுமதி தெரிந்த ஒரே சொக்கத்தங்கமான கட்சியினர் நீங்கள் மட்டுமே எனின் - அமைதியாக அந்த இடத்தில் நீங்கள் இருந்திருக்க வேண்டாமா?

திலீபன் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டிருந்தவர் என்றும், அந்த உண்ணாவிரதத்தை அவர் இருந்திருக்காவிட்டாலும் மரணித்திருப்பார் என்றும், அப்போதும் இப்போதும் பொதுவெளியில் திலீபனின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துபவர்களுக்கும், திலீபனின் நினைவு தினத்தை அமைதியாக நடத்துவதற்கு இடையூறாக இருந்த உங்களுக்கும் இடையே என்ன வேறுபாடுதான் இருக்கமுடியும்?

எதற்கு எடுத்தாலும “அரச புலனாய்வாளர்களால் இயக்கப்படுபவர்கள்” என்றும் “அரச ஆதரவு ஊடகங்கள்” என்றும் சகட்டுமேனிக்கு நீங்கள் அடுத்தவர்கள்மீது முத்திரை குத்தும்போது, உங்கள் கட்சியினரைப் பற்றிய விடயங்கள் அறிந்தவர்களும் பதிலுக்கு கதைகளை ஆதாரங்களோடு சொல்லத் தொடங்கினால் என்ன நடக்கும்?

இந்த இடத்தில் இருந்தவை சுய தணிக்கை செய்யப்பட்டுவிட்டன - ஆசிரியர்

எது எப்படி இருந்தாலும், தமிழ் மக்கள் மாத்திரமல்ல, இந்த ஊர்க்குருவியும் அதிக மதிப்பு வைத்திருந்தது அந்த அரசியல் கட்சியின்மீது. அந்த மதிப்பு, அவர்கள் கொண்டிருந்த கொள்கைமீது மட்டும் இல்லாமல், தமது கொள்கையில் அவர்கள் கொண்டிருக்கும் உறுதியின் மீதும் ஆனது. ஆனால், இவர்கள் போன்ற ஒருவரே போதும், அந்த கட்சியின் இறுதி அத்தியாயத்தை எழுதுவதற்கு!

- ஊர்க்குருவி

## தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் பதிவு!




தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நேற்று நல்லூர் நினைவு தூபி அருகே நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை...!

(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

ஈழநாடு
Eelanadu
27.09.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்துக்களின் தனித்துவத்தை பாதுகாத்தல்?

மீண்டும் பௌத்த மேலாதிக்கப் பிரச்னை ஒரு பேசுபொருளாக மாறியிருக்கின்றது. ஒருபுறம் குருந்தூர்மலை விவகாரமும் மறுபுறம் திருகோணேஸ்வர ஆலயப் பிரச்னையும் பேசு பெருளாகியிருக்கின்றன. 2009 இற்கு பின்னரான அரசியல் சூழலில், இந்த விடயம் அவ்வப்போது ஒரு பிரச்னையாக வெளிக்கிளம்பியது. ஆரம்பத்தில் இந்த விவகாரங்களை சட்ட ரீதியாகக் கையாளலாம் என்னும் போதனையே செய்யப்பட்டது. குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் சட்டத்தின் மூலம் இது போன்ற பல பிரச்னைகளை கையாளலாம் என்னும் வாதத்தை முன்வைத்திருந்தார். ஒரு சட்டத்தரனி அதனைத்தான் கூறவும் முடியும். ஆனால், இலங்கைத் தீவில் பௌத்தத்தின் அந்தஸ்து சட்டத்துக்கும் அப்பால்பட்டதாக இருக்கும போது என்ன செய்வது? குருந்தூர்மலை விவகாரம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

பௌத்த மேலாதிக்க விடயத்தில் பிக்குகள் சட்டத்தை பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. எப்போது வேண்டுமானாலும் அதனை மீறிச் செயல்படக் கூடிய ஆற்றலோடு இருக்கின்றனர். ஆனால் மறுபுறமோ, தமிழர்கள் மட்டும் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் இவ்வாறான பிரச்னைகளை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வது? எத்தனை காலத்துக்கு இவ்வாறு எதிர்ப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருப்பது? ஆனால், எதிர்ப்புக்களாலும் விடயங்களை சரியாகக் கையாள முடியவில்லை. நிரந்தரமாகத் தடுக்க முடியவில்லை.

இந்தப் பிரச்னையை கையாளுவதற்கு ஒரு தேசிய பொறிமுறை அவசியம். அதாவது, இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் செயல்பாடுகள் மீள்வரையறை செய்யப்பட வேண்டும். அத்துடன், தொல்பொருள் பாதுகாப்பு என்னும் பெயரில் கொண்டுவரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் அனைத்தும் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட வேண்டும். இந்து ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகள், இந்துக்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இந்துக்களின் அடையாளங்களை தொல்பொருள் என்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் கையாள முற்படுவது முற்றிலுமாகக் கைவிடப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படும் இந்துக்களுடன் தொடர்புடைய தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பராமரிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான பிரத்தியேக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். இதனை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். பிரச்னைகள் ஏற்படுகின்றபோது, இந்தக் குழுக்களுடன் கலந்துரையாடியே இறுதி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியம் என்னும் பெயரில் தேவையற்ற வகையில் இந்து ஆலய விடயங்களில் பலரும் தலையிடுவதும் தடுக்கப்பட வேண்டும். ஒரு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னும் வகையில் தலையிடுவதைத் தவிர, பல குழுக்களும் இதில் தேவையற்ற தலையீடுகளை செய்வது தடுக்கப்பட வேண்டும். இரண்டு பக்கத்திலும் இந்த விடயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஏனெனில், பல்வேறு சந்தர்ப்பங்களில் சுமுகமாக பேசித் தீர்க்க வேண்டிய விடயங்கள், தேவையற்ற அரசியல் குறுக்கீடுகளால் திசைமாறிவிடுகின்றன. இதற்கு திருகோணமலை கன்னியா சிவன் ஆலய விவாகரம் நல்ல உதாரணமாகும். கட்சி அரசியல் ரீதியான தலையீடுகள் பிரச்னையை வேறு திசைக்கு கொண்டுசென்றது. இறுதியில் அப்பகுதி பௌத்த பிக்கு, சிங்களவர்களை அணிதிரட்டி எதிர்ப்பை வெளியிடும் நிலைமை உருவாகியது. ஆலய விவகாரங்களைக் கையாளும் போது, ஒரு பக்குவமான அணுகுமுறை அவசியம்.

முதலில் குறித்த ஆலயத்தின் நிர்வாக சபை மற்றும் அப்பகுதி சமூகத் தலைவர்கள் மட்டத்தில்தான் விடயங்கள் கையாளப்பட வேண்டும். அவர்களால் நிலைமைகளை சமாளிக்க முடியாதென்னும் நிலையில்தான், அரசியல் தலையீடுகள் இடம்பெறவேண்டும். அதேவேளை, இந்து புராதனங்களையும் தொன்மையையும் பாதுகாக்கும் நோக்கில், வடக்கு - கிழக்கு தழுவிய வகையில், இந்துக்களுக்கான பரந்த ஆலயங்கள் மற்றும் மத ஸ்தாபனங்களுக்கான கூட்டமைப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டும். இதனை உலகளாவிய ரீதியிலான இந்துக்களுக்கான சர்வதேச ஸ்தாபனங்களோடு ஒன்றிணைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள், சர்வதேச அளவில் தங்களை ஒன்றிணைத்துக் கொள்வதன் மூலம்தான் முடிந்தளவு பாதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

# கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயம் எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு!

*கொழும்பு, செப். 27*

*கொழும்பு மாவட்டத்துக்குள் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*கொழும்பின் சில முக்கிய பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சால் வர்த்தமானி வெளியிடப்பட்டது.*

*ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, உயர்நீதிமன்ற வளாகம், பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம் உள்ளிட்ட முக்கிய கட்டடங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.*

*இந்த பிரதேசங்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றி ஒன்று கூடல், கூட்டங்களை நடத்துதல் உள்ளிட்ட செயல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*இது இலங்கை குடி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என சுட்டிக் காட்டி உயர்நீதிமன்றில் நேற்று சோசலிய இளைஞர் முன்னணியால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.* (ஐ)

# அதிஉயர் பாதுகாப்பு வலயம் வர்த்தமானியை இரத்து செய்க

## மனித உரிமைகள் ஆணைக்குழு

*கொழும்பு, செப். 27*

*உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் எந்த நியாயமும் அடிப்படையும் அற்றது பொய்யானது என இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.*

*உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தை பயன்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அதனடிப்படையில் அறிவிப்பை வெளியிட்டமை நாட்டின் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மோசமாக மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளது.*

*உயர் பாதுகாப்பு வலயங்களை அறிவிப்பதற்கு உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை பயன்படுத்த முடியாது எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச தேசிய மனித உரிமை தராதரங்களை பின்பற்றவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.* (ஐ)

# சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் சிறுவர் சந்தை

*அம்பாறை, செப். 27*




*சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலை யின் தரம் 1 இன் ஆசிரியர்கள் மற்றும் பகுதித் தலைவர் ஆகியோரினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் சந்தை பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.*

*தரம் ஒன்று மாணவர்களின் பாடப்பரப் பில் உள்ளபடி சந்தையில் பொருட்களை விற்பனை செய்வது எவ்வாறு?, வாங்குவது எவ்வாறு?, அதனை மக்களுக்குக் காட்சிப் படுத்துவது எவ்வாறு என்ற செயற்பாடுகளை மாணவர்களுக்குத் தெளிவூட்டி, அறிவூட்டும் நிகழ்வாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.*

*இதில் மாணவர்கள் சந்தை தொடர்பாக நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டதுடன் சந்தை மற்றும் விற்பனை தொடர்பான தங்கள் திறமைகளையும் வெளிக்காட்டி, அதிபர் உட்பட பார்வையாளர்களது பாராட்டுக்களை மாணவர்கள் பெற்றுக் கொண்டதும் சிறப்பம்சமாகும்.*

*இந்நிகழ்வில், பாடசாலை அதிபர் யூ. எல்.நஸார், பிரதி அதிபர் றிப்கா அன்ஸார் உட்பட உதவி அதிபர்களான ஐனுல் மர்சுனா, எம்.எச்.நுஷ்ரத் பேகம் மற்றும் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.* (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

செப்ரெம்பர் - 27 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 10
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவிதியை




### மேடம்

உங்கள் முயற்சி வெற்றி பெறும். தடைகளைக் கடந்து சாதிப்பீர்கள். வியாபாரத்தில் தடைகளை சரிசெய்வீர்கள். முயற்சியில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

### இடபம்

பிள்ளைகளின் வளர்ச்சி பெருமை சேர்க்கும். அவர்களின் எதிர்காலம் பற்றி சிந்திப்பீர்கள். குடும்பத்தினர் பாராட்டுவர். மற்றவர்களின் பலம், பலவீனம் அறிந்து வெற்றி காண்பீர்கள்.

### மிதுனம்

குடும்ப பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். உங்கள் விருப்பப்படி செயல்பட்டு எண்ணியதை நிறைவேற்றிக் கொள்வீர்கள். முயற்சி லாபமாகும்.

### கடகம்

பொருளாதார நிலை உயரும். சிந்தித்து செயல்பட்டு நீங்கள் ஈடுபடும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வரும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை சீராகும்.

### சிம்மம்

அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்னை சரியாகும். எதிர்பார்த்த வருவாய் வரும். உங்கள் முயற்சி ஆதாயத்தை ஏற்படுத்தும். ஆரோக்கியம் சீராகும். எதிர்பார்த்த வருவாய் வரும். நிதிநிலை உயரும்.

### கன்னி

எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைகள் விலகும். குல தெய்வ அருளால் உங்கள் எண்ணம் நிறைவேறும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். நிதிநிலை உயரும்.

### துலாம்

திடீர் செலவால் பணத்தேவை அதிகரிக்கும். போராடி சமாளிப்பீர்கள். குழப்பம் அதிகரிக்கும். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். கூட்டுத்தொழிலில் சங்கடத்தை சந்திப்பீர்கள்.

### விருட்சிகம்

வராமல் இருந்த பணம் வந்து சேரும். பிரபலங்களின் துணையுடன் வழக்கில் வெற்றி காண்பீர்கள். சிக்கல் தீரும். விரும்பியதை அடைவீர்கள். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும்.

### தனுசு

தொழிலில் நஷ்டத்திற்கு தீர்வு காண்பீர்கள். உங்கள் அணுகுமுறை ஆதாயம் தரும். வேலை தேடியவர்களுக்கு எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பணிபுரியும் இடத்தில் சிலருக்கு விரும்பிய இடமாற்றம் உண்டாகும்.

### மகரம்

தடை நீங்கி முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும். திட்டமிட்டபடி செயல்படுவீர்கள். முயற்சி நிறைவேறும். அலுவலகத்தில் உண்டான சங்கடம் மறையும். பணப்புழக்கம் கூடும்.

### கும்பம்

முயற்சியில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். மனதிற்கு சங்கடம் உண்டாகும் வகையில் சில செயல் இன்று நடந்தேறும். பழைய பிரச்னை ஒன்று மீண்டும் தலையெடுக்கும்.

### மீனம்

தடைபட்ட முயற்சி நடந்தேறும். எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள். நீண்ட நாளுக்குப் பிறகு மனம் மகிழும்படியான சம்பவம் நடைபெறும். எதிர்பாராத வரவு உங்களைத் தேடி வரும்.

*நளினி, ரவிச்சந்திரன் மேன்முறையீடு -*

# மத்திய, மாநில அரசுகளை பதிலளிக்குமாறு உத்தரவு!

புதுடில்லி, செப். 27

நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் தங்களை விடுதலை செய்யக்கோரி தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கில், மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க அறிவித்தல் பிறப்பித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த 7 பேரில் ஒருவரான பேரறிவாளனை கடந்த மே மாதம் 18ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றம் தனது தனிப்பட்ட அதிகாரமான சட்டப்பிரிவு 142-ஐ பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது. பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து இந்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மற்ற 6 பேரும் விடுதலை கோர சட்ட வழிவகை ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் நளினி மற்றும் ரவிச்சந்திரன் இருவரும் தனித்தனியே உச்ச நீதிமன்றத்தில் தங்களை விடுதலை செய்யக் கோரி மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவில், ”பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பில், பேரறிவாளனின் நன்னடத்தை குறித்து, சிறை விடுமுறையில் வெளிவந்தபோதும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டதாக மேற்கோள் காட்டியுள்ளது. தாங்களும் அதேநிலையில் உள்ளதால், தங்களையும் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். மேலும், இந்த வழக்கில் தங்களை விடுதலை செய்யும் வரை தங்களுக்கு இடைக்கால பிணை வழங்க வேண்டும் எனவும் மனுவில் கோரியிருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், “இந்த விவகாரத்தில் மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் நிலைப்பாட்டை அறிய வேண்டி உள்ளது. எனவே இது தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க அறிவித்தல் பிறப்பித்து உத்தரவிட்டு, விசாரணையை ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (ஐ)

# மதவெறி நச்சு சக்திகள் கலகம் விளைவிக்க முயற்சி!

## மு. க. ஸ்டாலின் அறிக்கை

சென்னை, செப். 27

“எந்த வகையிலாவது தமிழ்நாட்டில் காலூன்றி விடவேண்டும் என நினைக்கின்ற மதவெறி நச்சு சக்திகள் இதுபோன்ற சூழல்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்ள முடியுமா என்று எதிர் பார்க்கின்றன. மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கி, கலகம் விளைவிக்க பார்க்கின்றன. ” என்று தமிழக முதல்வரும், தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

“இந்தியாவே திரும்பிப் பார்க்கக் கூடிய வகையில் இன்றைக்கு நம்முடைய ஆட்சி முறை மிகச் சிறப்பான வகையில் அமைந்திருப்பதை ஏடுகள் பலவும் பாராட்டுகின்றன. ஊடகங்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. அதேநேரத்தில் இந்த ஆட்சிக்கு எப்படியாவது அவப்பெயர் ஏற்படுத்திட வேண்டும் என்ற தீயநோக்கம் கொண்ட சில அரசியல் சக்திகள் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. நேரடியாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அந்த நச்சு சக்திகளுக்கு எந்தவகையிலும் நாம் இடம் கொடுக்காமல் நம்முடைய பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

எந்த வகையிலாவது தமிழ்நாட்டில் காலூன்றி விடவேண்டும் என நினைக்கின்ற மதவெறி நச்சு சக்திகள் இதுபோன்ற சூழல்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்ள முடியுமா என்று எதிர்பார்க்கின்றன. மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கி, கலகம் விளைவிக்க பார்க்கின்றன. அதற்காகக் கட்சி நிர்வாகிகள், அமைச்சர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளை வெட்டியும் ஒட்டியும், குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் தவறான பொருள்படும்படியான வாசகங்களுடன் வெளியிட்டு, அவற்றைத் தங்களுக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள்.

எனவே, இத்தகைய நச்சு சக்திகளுக்கு சிறிதும் இடம் கொடுக்காத வகையில் நாம் கவனமுடன் செயல்படுவோம். பொறுப்புடன் நடப்போம். நம்முடைய திட்டங்களைச் செயல்படுத்தி வருவோம். அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்போம். அவை பற்றி நாம் பேசுவதைவிட, பயன்பெற்ற மக்கள் பேசுவார்கள். அவர்களே இந்த நச்சு சக்திகளுக்குத் தக்க பதிலடி கொடுப்பார்கள். அந்தப் பொறுப்பை உணர்ந்து நம் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்வோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# தேசவிரோதிகளின் துணிச்சலுக்கு திருமாவளவன், சீமானே காரணம்!

## பாரதிய ஜனதா கட்சி சாடல்

சென்னை, செப். 27

தமிழ்நாட்டில் தேச விரோதிகள் தைரியமாக, துணிச்சலாக இருக்க திருமாவளவன், சீமான் தான் காரணம் என்று பா. ஜ. கட்சியின் எச். ராஜா கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் பெற்றோல் குண்டு வீசப்பட்ட விவகாரத்தை திசை திருப்ப முயலும் திருமாவளவன், சீமானை கைது செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்

புதுச்சேரியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த எச்.ராஜா கூறுகையில்,

தமிழ்நாட்டில் பயங்கரவாதிகள், தேச விரோதிகள், வன்முறைவாதிகள் தைரியமாக, துணிச்சலாக இருப்பதற்கு காரணம் திருமாவளவன், சீமான் போன்ற தீயசக்திகள்தான். அரசியலில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள்.

கோவையில் பொலிஸ் நிலையத்துக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அங்கு பொலிஸ் நிலையத்துக்கு எதிரே எஸ். டி. பி. ஐ., பி. எவ். ஐ. போன்ற தீவிர கட்சிகள் போராட்டம் நடத்தும் போது அவர்களுடன் இருப்பது விடுதலை சிறுத்தைகள். விடுதலை சிறுத்தைகளுக்கும், எஸ்.டி.பி.ஐ, பி.எப்.ஐக்கும் வித்தியாசம் இல்லை. எனவே, தமிழக அரசு அரசியல் ரீதியாக உடனடியாக விடுதலை சிறுத்தைகள் கட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொய் செய்திகளை பரப்பும் திருமாவளவனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். காஷ்மீர் விடுதலை இயக்க தலைவர்களை வைத்து கடலூரில் கூட்டம் போட்டவர்தான் சீமான். நாட்டுக்கு விரோதமானவர்தான் சீமான் - என்றார். (ஐ)

# வடக்கில் 5 ஆண்டுகளில் மட்டும் 742 சிறுவர் துஷ்பிரயோகங்கள்!

## இளவயதுக் கர்ப்பம் காரணமாக 49 சிறுமிகள் பாதுகாப்பு இல்லத்தில்

யாழ்ப்பாணம், செப். 27

**“வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள் பாலியல்ரீதியாகவும், உடலியல்ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இளவயது கர்ப்பம் காரணமாக 49 சிறுமிகள் பாதுகாப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.”**

- இவ்வாறு சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் பதிவாகியுள்ளன.

2018ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 105 பேரும், உடலியல் ரீதியாக 91 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு 106 பேர் பாலியல் ரீதியாகவும், 65 பேர் உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 118 பேரும், உடலியல் ரீதியாக 52 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பாலியல் ரீதியாக 123 பேரும், உடலியல் ரீதியாக 15 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு கடந்த ஜூன் மாதம் வரையில் பாலியல் ரீதியாக 59 பேரும், உடலியல் ரீதியாக 8 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். (அ)



# தியாகி தீலீபனின் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, செப். 27

தியாகி திலீபனின் 35 ஆவது நினைவு தினம் வவுனியா காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று அனுஷ்டிக்கபட்டது.

அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி,ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் கையளிக்கப்பட்டு,கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தினர் கலந்து கொண்டனர். (அ)

# சுங்கத்தில் பதிந்த நிறுவனங்கள் மூலம் மட்டுமே பண கொடுக்கல் - வாங்கல்கள்

## புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 27

சுங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் ஊடாக மாத்திரம் கொடுக்கல் வாங்கல்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த பணியாளர்கள் மற்றும் அங்கு வசித்துவருபவர்கள் இலங்கைக்கு பொருட்களை அனுப்பும்போது, பதிவு செய் யப்படாத நிறுவனங்கள் ஊடாக பொருட்களை அனுப்புவதை தவிர்க்குமாறு இலங்கைச் சுங்கம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பரிசு பொருட்கள், பயணப்பொதிகள் மற்றும் ஏனைய பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்படும் போது, அவை காணாமல்போதல் மற்றும் சேதமடைவது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு சுங்க திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (அ)

# நாயை காப்பாற்ற முயன்ற பெண் ரயில் மோதி மரணம்!

கொழும்பு, செப். 27

பக்கத்து வீட்டுப் பெண் நடைப்பயிற்சிக்கு அழைத்துச் சென்ற வளர்ப்பு நாயை, ரயில் விபத்திலிருந்து காப்பாற்ற முயன்ற 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயார், ரயிலில் மோதி பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை, கதுருவெல 20 இல் வசித்து வந்த வீரதுங்க ஆராச்சிகே இரேஷா பிரசரணனி (வயது-45) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி காலை 8.30 மணியளவில் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் கதுருவெலயில் உள்ள அவரது குடியிருப்புக்கு அருகில் குறித்த பெண் ரயிலில் மோதுண்டார்.

அயல் வீட்டு பெண், தனது வளர்ப்பு நாயுடன் நடைப் பயிற்சிக்குச் சென்றபோது, வீட்டின் பின்புறம் உள்ள ரயில் தண்டவாளத்தை நோக்கி ஓடியுள்ளது. அப்போது ரயில் வந்து கொண்டிருந்தது. இதை அவதானித்த பெண், ரயில் பாதைக்கு ஓடி நாயைக் காப்பாற்றியுள்ளார்.

எனினும், ரயில் அந்தப் பெண்ணை மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த பெண் பொலனறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் மூளைச்சாவு அடைந்துள்ளதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அத்தகைய நோயாளியின் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் போன்ற உடல் உறுப்புகளை தானமாக அளித்து மேலும் மூன்று நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று நோயாளியின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, இந்த நோயாளியின் சிறுநீரகம் மற்றும் கல்லீரலை தானமாக வழங்குவதற்கு இணங்கினர்.

பெறப்பட்ட சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பொலனறுவை சிறுநீரக வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தப் பெண்ணின் கல்லீரல் மற்றுமொரு நோயாளிக்கு மாற்றுவதற்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். (அ)

# படைத் தரப்பினருக்கு 40 ஏக்கர் அரச காணி இதுவரை கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னர் பாதுகாப்புத் தரப்பினருக்கு 40 ஏக்கர் அரச காணிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்ட கேள்விக்கு, வடக்கு மாகாண காணி திணைக்களம் வழங்கிய பதிலிருந்தே இந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் 22 ஆயிரம் குடும்பங்கள் காணிகள் இல்லாமல் இருக்கும் சூழலில், இந்தக் காணிகள் 2019, 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்டுள்ளன.

கடற்படையினருக்கு 22.15 ஏக்கரும், பொலிஸாருக்கு 9.5 ஏக்கரும், இராணுவத்தினருக்கு 6.25 ஏக்கரும், விமானப்படைக்கு 1.24 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு 2019 ஆம் ஆண்டு அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டானில் 0.4 ஏக்கரும், புதுக்குடியிருப்பில் 4.9 ஏக்கரும், கொக்கிளாயில் 1 ஏக்கரும், பளையில் 2 ஏக்கரும், நயினாதீவில் 0.25 ஏக்கரும், வவுனியா தெற்கில் 1 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு கடற்படையினருக்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலியில் 0.37 ஏக்கரும், யாழ்ப்பாணத்தில் 0.06 ஏக்கரும், ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் 0.3 ஏக்கரும், கொக்குத்தொடுவாயில் 3.39 ஏக்கரும், கொக்கிளாய் கிழக்கில் 1.49 ஏக்கரும், பூநகரியில் 7.38 ஏக்கரும், மண்டைதீவு தெற்கில் 0.62 ஏக்கரும், அல்லைப்பிட்டியில் 0.25 ஏக்கரும், வேலணை கிழக்கில் 0.25 ஏக்கரும், ஊர்காவற்றுறை சுருவிலில் 0.19 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

விமானப்படையினருக்கு கேப்பாபிலவில் 1.24 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கு கரைதுறைப்பற்றில் 1.83 ஏக்கர் கையளிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இராணுவத்தினருக்கு முசலியில் 4.42 ஏக்கரும், கடற்படையினருக்கு வேலணையில் 0.31 ஏக்கரும், நெடுந்தீவில் 1.5 ஏக்க ரும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கடற்படையினருக்கு பூநகரி பொன்னாவெளியில் 5 ஏக்கரும், வலைப்பாட்டில் 0.25 ஏக்கரும், முசலியில் 0.21 ஏக்கரும், காரைநகரில் 0.04 ஏக்கரும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த அரச காணிகளுக்குரிய கோரிக்கைகளில் சில, பாதுகாப்புத் தரப்பினரால் வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் முன்வைக்கப்பட்டபோது அப்போதைய காணி அமைச்சராக இருந்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு; வெதுப்பக உரிமையாளர்கள் கவலை!

கொழும்பு, செப். 27

உள்ளூர் சந்தையில் 50 கிலோகிராம் கோதுமை மா மூட்டையொன்றின் விலை 21 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக கிராமப்புறங்களில் உள்ள பல வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, தாம் கோரியுள்ள கோதுமை மா கிடைக்கப்பெற்றதன் பின்னர் கோதுமை மாவின் விலை குறைக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# போராட்டங்களைத் தடுப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல!

## கூறுகிறார் பதில் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, செப்.27

**“போராட்டங்களை தடுப்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பின் அனுமதியை இனி குறைந்தபட்சம் 6 மணி நேரத்துக்கு முன்னராவது பெறவேண்டும்.” _ என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**



பாதுகாப்பு அமைச்சால் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“மக்களின் போராடும் உரிமையை நாம் ஏற்கின்றோம். அதற்கு தடை இல்லை. ஆனால் அனுமதி பெறப்படவேண்டும். சட்டம், ஒழுங்கை மீறும் வகையிலான போராட்டங்களையே பாதுகாப்பு தரப்பு கட்டுப்படுத்தும்.

அதேபோல உயர்பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மக்களின் நாளாந்த பணியை முன்னெடுக்க தடை ஏதும் இல்லை. ” - என்றும் அவர் கூறினார். (அ)

# முல்லைத்தீவு குருந்தூர் மலை பௌத்தர்களுக்குரிய சொத்து

## கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, செப். 27

முல்லைத்தீவு-குருந்தூர் மலை பகுதியானது தமிழர்களுடைய பகுதி அல்ல எனவும் அது முழுமையாக பௌத்தர்களின் பிரதேசம் என்பதை வலியுறுத்தியும் நேற்று கொழும்பில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கொழும்பு சுதந்திர சதுக்கப்பகுதியில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி புத்தசாசன அமைச்சினை நோக்கிப் பேரணியாக சென்றது.

குருந்தூர்மலை பிரதேசம் தமிழர்களுடையது அல்ல, அது முழுமையாக பௌத்தர்களின் பிரதேசம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் இந்த விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகள்தான் தமது சுயலாப அரசியலுக்காக பிரச்னையை ஏற்படுத்துவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் குற்றம் சுமத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான பௌத்தர்கள் மற்றும் பிக்குமார் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மொஸ்கோவிலிருந்து விமான சேவை ஒக்ரோபர் 9 முதல் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, செப். 27

ரஷ்யாவின் ‘ஏரோஃப்ளோட்’ விமான சேவை, ஒக்டோபர் 9 ஆம் திகதி முதல் மொஸ் கோவிலிருந்து கொழும்புக்கு விமான பயணங்களை மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, நிறுவனம் ஆரம்பத்தில் வாரத்திற்கு இரண்டு முறை விமானங்களை இயக்கும்.தாய்லாந்தின் பேங்கொக்கிற்கான விமானங்கள் அக்டோபர் 30 ஆம் திகதி மீண்டும் தொடங்குவதோடு மேலும் வாரத்திற்கு ஏழு விமானங்கள் அங்கு சேவையில் ஈடுபடும்.

அத்துடன் நவம்பர் 2 ஆம் திகதி முதல் இந்தியாவின் கோவாவுக்கு வாரத்திற்கு மூன்று விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் அறிவித்துள்ளது.

ஏரோஃப்ளோட், தனது விமானம் ஒன்று கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து கடந்த ஜூன் மாதம் முதல் இலங்கைக்கான விமானங்களை நிறுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. விமானத்தை குத்தகைக்கு எடுத்தவருடன் தொடர்புடைய ஒரு ஐரிஷ் நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்ட கொழும்பு நீதி மன்றத்தின் உத்தரவு காரணமாகவே விமானம் தடுத்து வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் ராஜதந்திர முறுகலை ஏற்படுத்திய நிலையில், அண்மையில் அமைச்சர் பந்துல குணவர்தன இலங்கையின் சார்பில் மன்னிப்பு கோரினார். (அ)

# குறைகிறது முட்டை விலை

கொழும்பு, செப். 27

உற்பத்தி செலவு குறைந்துள்ளதால் முட்டையின் விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவாக உள்ளதால், அதனை மேலும் குறைக்க முடியும் என சங்கத்தின் செயலாளர் அனுரசிறி குமாரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, முட்டை விலை திருத்தம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது. (அ)

# கோட்டாபயவின் மனைவியிடம் கப்பம் கோரிய இளைஞன் கைது!

கொழும்பு, செப். 27

இலங்கையின் முன்னாள ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் மனைவி அயோமா ராஜபக்ஷவை மிரட்டி 10 லட்சம் ரூபாய் கப்பம் கோரினார் எனக் கூறப்படும் நபரொருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொலன்னாவ பகுதியிலுள்ள சலூன் ஒன்றில் பணிபுரியும் இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் மனைவியான அயோமா ராஜபக்ஷவின் தனிப்பட்ட தொலைபேசிக்கு அழைப்பு விடுத்த நபர் ஒருவர் அவரிடம் 10 லட்சம் ரூபாய் கப்பம் கோரியுள்ளார்.

தொடர்ந்து அழைப்புகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், தான் முன்னாள் ஜனாதிபதியின் மனைவி எனவும் இவ்வாறு அழைப்பேற்படுவதனை நிறுத்துமாறும் அயோமா ராஜபக்ஷ குறித்த நபரிடம் தெரிவித்துள்ளார். ஆனால் தான் யாரிடம் பேசுகிறேன் என தனக்கு தெரியும் என அழைப்பேற்படுத்திய இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இனியும் தாமதிக்காமல் பத்து லட்சம் ரூபாய் தொகையை தரும்படி கேட்டுள்ளார். இல்லை என்றால் முதல் முறை போல் இல்லாமல் சுனாமி போல் கூட்டத்தைக் கொண்டு வந்து மரிஹான வீட்டை சுற்றிவளைத்து துரத்தியடிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நபரிடம் இருந்து பல மிரட்டல் அழைப்புகள் வந்ததையடுத்து, அயோமா இது குறித்து முன்னாள் ஜனாதிபதியின் பணியாளருக்கு தெரிவித்தார்.

அதன் பின்னர் அவர் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டிற்கமைய, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த நபரை நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர். (அ)

# ஜப்பான் பறந்தார் ஜனாதிபதி பதில் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, செப். 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள நிலையில், ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கும் சமயத்தில் பணியாற்றுவதற்காக, தனக்குக் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்களை நியமித்துள்ளார்.

குறித்த அமைச்சுக்களின் இராஜாங்க அமைச்சர்களே இவ்வாறு பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பதில் பாதுகாப்பு அமைச்சராக ராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, தொழில்நுட்ப பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பெண்கள் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் அனுபா பெஸ்குவல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# காட்டுக்குள் வீசப்பட்டிருந்த குழந்தை உயிருடன் மீட்பு!

கொழும்பு, செப். 27

பண்டுவஸ்நுவர, பண்டாரகொஸ்வத்தை, உகுருஸ்ஸகம ஏரிக்கரையில் உள்ள காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் புதிதாகப் பிறந்த குழந்தையொன்று உரப் பையில் சுற்றப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குழந்தை அழும் சத்தம் கேட்டு கால்நடைகளை கட்ட சென்ற பெண் ஒருவர் பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் இருந்த குழந்தையை கண்டு, வழங்கிய தகவலின் அடிப்படையில் குழந்தை மீட்கப்பட்டது.

அங்கு வந்த கிராம மக்கள் அறிவித்ததன் பேரில் அம்புலன்ஸ் மூலம் குழந்தை நிகவெரட்டிய மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிறந்த ஆண்குழந்தையின் தொப்புள்கொடி கூட அகற்றப்படாமல் இருந்தது.

வாரியபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தவறான தீர்மானங்கள் எடுத்தது பெரமுன அரசு

## ஏற்றுக்கொள்கிறார் மஹிந்தானந்த

கொழும்பு, செப். 27

கடந்த காலங்களில் அரசாங்கம் எடுத்த சில தீர்மானங்கள் நாட்டு மக்களை கடுமையாகப் பாதித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், விவசாய அமைச்சராக பதவி வகித்த கால எல்லையில், உரம் தொடர்பான தீர்மானம், மக்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் எடுத்த தீர்மானங்களினால் கடும் பின்னடைவைச் சந்திக்க நேரிட்டதாக தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு அளப்பரிய சேவையை செய்து தலைவர்களை உருவாக்கிய அரசாங்கம் என்றும், கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்த பாடுபட்ட அரசாங்கம் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (அ)

# மாகாண சபை முறையை வலுவாக்க தென்னிலங்கை இளைஞர்கள் தயார்!

## மஹிந்த தேசப்பிரியவிடம் கையளிக்கப்பட்ட முன்மொழிவு

கொழும்பு,செப்.27

**மாகாண சபை முறையை வலுப்படுத்துவதற்காக ஜனநாயக இளைஞர் அமைப்பினர் உள்ளிட்ட இளைஞர் அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து தயாரித்த சமூகமயப்படுத்தப்பட்ட முன்மொழிவு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.**

அதில் மாகாண சபை முறையை வலுப்படுத்துவதற்கு பல ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு ஜனநாயக இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாந்தோட்டை கிரீன் ஹோட்டல் வளாகத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.



தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான மஹிந்த தேசப்பிரியவிடம் தெற்கு இளைஞர்கள் தயாரித்த திட்ட முன்மொழிவு உத்தியோக பூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த திட்ட முன்மொழிவில் மாகாண ஆளுநர், முதலமைச்சரும் அமைச்சரவையும், மாகாண சபை மற்றும் மத்திய அரசு, சட்ட ஏற்பாடு, மாகாண நீதிமன்ற முறைமை, மாகாண நிதி அதிகாரம், மாகாண அரச சேவை, காணி மற்றும் இயற்கை வளங்கள், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மாகாணசபை முறையை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளாக முன் வைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் அமைப்புக்களை பிரதிநிதிப் படுதி 200 பேரளவில் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி திசரு திசாநாயக்க, மாற்று அணியை பிரதிநிதித்துவப்படுத்தி கம்மன்பில, எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)



# மாந்தை கிழக்கில் விற்பனைச் சந்தை

முல்லைத்தீவு, செப். 27

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் விற்பனைச் சந்தை நேற்று திங்கள்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

குறித்த பிரதேச விற்பனைச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் சம்பிரதாயபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

பிரதேச விற்பனைச் சந்தையின் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ,கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோதர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பட்டோர் கலந்து கொண்டனர். (அ)

### ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்:

# ஜனாதிபதிக்கு எதிரான மனுக்களை விசாரிக்காமல் இருப்பதற்கு முடிவு!

கொழும்பு, செப். 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கை தொடர முடியாது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஏழு பேர் கொண்ட உயர் நீதிமன்ற குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க, புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்த போதிலும், அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்காக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களில், ஜனாதிபதி ரணில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருப்பதனை கருத்திற்கொண்ட நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதுடன், மனுக்களை தொடர வேண்டாம் என உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான 7 நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் 12 அடிப்படை உரிமை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உடையார்கட்டு நகரில் மக்கள் திரண்டு திலீபனுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, செப். 27

தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் பகுதிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளில் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பு உடை யார் கட்டு நகரில் நேற்று காலை 9 மணிக்கு திலீபனின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வு உடையார் கட்டு நகரில் அமைக்கப்பட்ட விசேட கொட்டகையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி



மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

# மன்னாரில் தியாகதீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

மன்னார், செப். 27

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் தியாகதீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்



தல் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மத தலைவர்கள், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (அ)



# காஷ்மீருக்கு வேண்டும் சுயாட்சி

——— ப.சிதம்பரம்

காஷ்மீரம் தொடர்பாக 1947 முதலே இருவிதமான எதிரெதிர்க் கருத்துகள் தொடர்கின்றன. அப்போதைக்கு அப்போது இது தொடர்பான சிந்தனைகள் வெவ்வேறு மாற்றங்களை அடைந்து காஷ்மீரம் தொடர்பாக இரண்டுக்கும் மேற்பட்ட கருத்துகள் உலவுவதைப் போன்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. உண்மையில் இரண்டே விதமான கருத்துகள் தான் நிலவுகின்றன. ஆனால் அவை ஒன்றுக்கொன்று எதிரானவை.

அசலான சிந்தனை, காஷ்மீரின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. 1947 அக்டோபர் 26இல் இந்தியாவுடன் காஷ்மீர் சமஸ்தானத்தை இணைக்க ஒப்புக்கொண்டு மகாராஜா ஹரி சிங் கையெழுத்திட்ட உடன்பாட்டிலேயே அது இடம்பெற்றிருக்கிறது. அதை இந்திய அரசமைப்புச் சட்டம் அங்கீகரித்தது. காங்கிரஸ் கட்சி அதன் பின்னால் இருந்த நோக்கத்தை அப்படியே ஏற்றது. ஆண்டுகள் செல்லச் செல்ல காங்கிரஸ் கட்சி தன்னுடைய நிலையை நீர்த்துப்போக விட்டுவிட்டாலும், 'காஷ்மீரத்துக்கு தனி அந்தஸ்து' என்ற மையமான கருத்தை ஒவ்வொரு தருணத்திலும் வலியுறுத்தியே வந்திருக்கிறது.

இந்தக் கருத்துக்கு எதிரான கருத்து, ஜவாஹர்லால் நேரு தலைமையிலான முதல் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஷியாமா பிரசாத் முகர்ஜியிலிருந்து தொடங்குகிறது. அவர் சார்ந்த ஆர்எஸ்எஸ் அமைப்பும் அதன் அரசியல் வாரிசுகளும் - பாஜக உள்பட - முகர்ஜியின் கருத்தையே கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு மேலும் பல அடுக்குகளையும் அவை ஏற்றிவிட்டன. இந்தியாவுடன் காஷ்மீரம் இணைந்த உடன்பாட்டையே நிராகரிக்கும் அளவுக்கு அதைச் சிதைத்தும் வருகின்றன.

**காங்கிரஸ் நிலையில் மாற்றம் இல்லை**

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு அரசமைப்புச் சட்டப்படி அளித்து வந்த பிரத்யேக நிலையை நீக்கும் மிகவும் தீவிரமான எதிர்நிலையை பாஜக அரசு 2019 ஆகஸ்ட் 5இல் எடுத்தது. ஜம்மு-காஷ்மீர் என்ற மாநிலத்தையே இல்லாமலாக்கி, அதை ஜம்மு - காஷ்மீர், லடாக் என்ற இரண்டு மத்திய ஆட்சிக்குள்பட்ட நேரடிப் பகுதிகளாக பிரித்தும்விட்டது.

ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு மறுநாள், காங்கிரஸ் கட்சியின் செயற்குழு (காரிய கமிட்டி) அவசரக் கூட்டம் நடத்தி, இதை முற்றாக நிராகரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் இதுதான்: "ஒருதலைப்பட்சமாக, வெட்கக்கேடாக, ஜனநாயகமற்ற முறையில் அரசமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவை ஒன்றிய அரசு கைவிட்டதை காங்கிரஸ் காரிய கமிட்டி கண்டிக்கிறது. அரசமைப்புச் சட்டத்தின் சில பிரிவுகளுக்குத் தவறாகப் பொருள் கூறி இந்த நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. ஜம்மு-காஷ்மீர் மாநிலமும் இந்திய அரசும் செய்துகொண்ட உடன்படிக்கையை அங்கீகரிப்பதே அரசமைப்புச் சட்டத்தின் 370வது கூறு. அதைத் திருத்தும் வரையில் அதை மதித்து அமல்படுத்த வேண்டும். அதைத் திருத்துவதாக இருந்தால் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளுடனும் ஆலோசனை கலக்க வேண்டும், அரசமைப்புச் சட்டத்துக்கு உள்பட்டே அதை நிறைவேற்ற வேண்டும்."

காங்கிரஸ் காரிய கமிட்டியின் நீண்ட நாள் மற்றும் மூத்த உறுப்பினரான குலாம் நபி ஆசாத் அந்தக் கூட்டத்தில் பங்கேற்று தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

**திரும்பப் பெற முடியாத நடவடிக்கைகள்**

மோடி அரசு சட்டப்படியாக எடுத்ததாக கூறிக்கொள்ளும் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகளையும் இங்கே நினைவுகூர்வது அவசியம்:

காஷ்மீருக்குள்ள சிறப்பு அந்தஸ்தை நீக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் எதுவும் நாடாளுமன்றத்தில் மசோதாவாகக் கொண்டுவரப்படவும் இல்லை, நிறைவேற்றப்படவும் இல்லை.

அரசு 2019 ஆகஸ்ட் 5இல் அரசமைப்புச் சட்டத்தின் 370(1) பிரிவின் கீழ் ஓர் ஆணையைப் பிறப்பித்து, 1954இல் இதேபோல பிறப்பிக்கப்பட்ட ஆணையை ரத்துசெய்ததுடன், அரசமைப்புச் சட்டம் 367(4)க்கு இன்னொரு உட்பிரிவைச் சேர்த்தது (இது அந்த சட்டக்கூறுக்கு விளக்கமாகும்). அதே நாளில், அரசமைப்புச் சட்டம் 370ஐ நீக்கும் தீர்மானத்தை அரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தது. அது இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது - அதுவும் அரசமைப்புச் சட்டத்தின் 370 (3)இன் பிரிவின் படியாக. அதே நாளில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இரண்டு ஒன்றியப் பிரதேசங்களாக (ஒன்றிய அரசின் ஆட்சிக்குள்பட்ட நேரடிப் பகுதிகள்) பிரிக்கும் மசோதாவை (2019) மாநிலங்களவையில் கொண்டு வந்து நிறைவேற்றியது. அதே தீர்மானம் அடுத்த நாள் மக்களவையிலும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் 3வது கூறின் கீழ் இது நிறைவேற்றப்பட்டது.

குடியரசுத் தலைவர் இது தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் 370 (3)வது பிரிவின் கீழ் 2019 ஆகஸ்ட் 6இல் அறிவிக்கை வெளியிட்டார். 'அரசமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவின் கீழ் இதுவரையில் இருந்த கூறுகள் அனைத்தும் இன்று முதல் விலக்கிக் கொள்ளப்படுகின்றன, இந்த அறிவிக்கையின் கீழ்வரும் புதிய பிரிவு மட்டுமே இனி அமலில் இருக்கும்!' என்று அந்த அறிக்கை சொன்னது.

காங்கிரஸ் காரிய கமிட்டியில் இருந்த அனைத்து உறுப்பினர்களுமே இந்த நடவடிக்கைகள் அனைத்துமே அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானவை, சட்ட விரோதமானவை என்ற கருத்தையே கொண்டிருந்தனர். அந்த இரு நாள்களில் அரசு எடுத்த நடவடிக்கைகள் எதற்குமே நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஒப்புதல் தேவைப்படவில்லை. சிறப்பு அந்தஸ்து ரத்து தொடர்பான நடவடிக்கை, அரசு ஆணை மூலமும் அறிவிக்கை மூலமும்தான் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான தீர்மானமும் மசோதாவும் நாடாளுமன்றத்தின் சாதாரணப் பெரும்பான்மை வலுவைக் கொண்டே நிறைவேற்றப்பட்டன.

கேள்விக்குரிய இந்த நடைமுறைகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் இந்த நடவடிக்கைகள் அனைத்துமோ அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றோ அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று கருதினால், ஒன்றிய அரசு எடுத்த அனைத்து நடவடிக்கைகளுமே திரும்பப் பெறப்பட வேண்டியவை என்பது இங்கே நினைவில் கொள்ளப்பட வேண்டியது ஆகும். அல்லது மோடி அரசுக்குப் பதிலாக வேறொரு அரசு ஆட்சிக்கு வந்தால், காஷ்மீரத்தின் தனி அந்தஸ்தை ரத்துசெய்த இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அல்லது ஒரு சில, திரும்பப் பெறப்படலாம்.

குலாம் நபி ஆசாதுக்கு இது அனைத்துமே தெரியும். அப்படி இருக்க ஏன் அவர், "அரசமைப்புச் சட்டம் 370 மீண்டும் அமலுக்கு வரும் என்று எந்த அரசியல் கட்சி யாவது மக்களிடம் கூறினால் அது பொய்யான வாக்குறுதியாகத்தான் இருக்க முடியும்" என்று கூறுகிறார்?

**விடுதலை அல்ல சுயாட்சி**

ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு மையப் பிரச்சினை அரசமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவு அல்ல - நீக்கப்பட்ட சிறப்பு மாநில அந்தஸ்து தான். 2019 ஆகஸ்ட்டில் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டு விட்டாலும்கூட, காஷ்மீரப் பள்ளத்தாக்கின் பெரும்பாலான மக்களும் (ஜம்மு - லடாக்கிலும் கணிசமானவர்களும்) தங்களுடைய மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து தொடர வேண்டும் என்றே வலியுறுத்துகின்றனர், அது நிலைநாட்டப்படாதா என்றே ஏங்குகின்றனர். சிறப்பு அந்தஸ்து என்பது இந்தியக் குடியரசின் நிரந்தர உறுப்பினராக மாநிலத்தை வைத்திருக்கும் அதேவேளையில், அதற்கு சுயாட்சியை அளித்துவந்தது.

காஷ்மீர் மக்களுடன் பலமுறை நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் சொல்கிறேன், அவர்கள் இந்தியாவிலிருந்து பிரிந்துபோக வேண்டும் என்றோ, சுதந்திரம் வேண்டும் என்றோ கோரவில்லை. அதிக அளவுக்கு சுயாட்சி வேண்டும் என்றே கேட்கின்றனர். இது தொடர்பாக முன்பு பிரதமர்களாகப் பதவி வகித்த பி.வி.நரசிம்ம ராவ் (சுயாட்சிக்கு வானமே எல்லை), அடல் பிஹாரி வாஜ்பாய் (இன் சானியாத், ஜமுரியாத், காஷ்மீரியாத்) ஆகிய வாக்குறுதிகளைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்கின்றனர்.

மிகப் பெரிய கூட்டரசில் இடம் பெற்றுள்ள மாநிலம் அதிகச் செயல்பாட்டு சுதந்திரம் வேண்டும் என்று கேட்பது வழக்கத்துக்கு மாறானது அல்ல. இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களுடன் சுயாட்சி தரப்பட வேண்டும் என்றே இந்திய அரசு இலங்கையிடம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மாநாட்டுக் கூட்டத்தில்கூட சமீபத்தில் - 2022 ஆகஸ்ட் 12இல் - இந்தியா இக்கருத்தை வலியுறுத்தியது. ஒன்றிய அரசுடன் சமரசப் பேச்சு நடத்தும் நாகாலாந்து ஆயுதக் குழுக்களும் இதே கோரிக்கையைத் தான் முன்வைக்கின்றன. எந்த அளவுக்கு சுயாட்சி வழங்குவது என்பதில் கருத்து வேறுபாடு நிலவுவதால், இந்தப் பேச்சுகள் தேக்கநிலையில் உள்ளன.

காங்கிரஸ் காரிய கமிட்டியின் உறுப்பினரும் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ஆசாத், காஷ்மீரம் தொடர்பான மூல சிந்தனைக்கு ஆதரவாகத்தான் குரல் கொடுத்துவந்திருக்கிறார்.




நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தை இழந்துவிட்ட ஆசாத், காஷ்மீரம் தொடர்பான 'எதிர்க் கருத்தை' இன்று தழுவியிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது!

# உலகின் மிக ரகசியமான அமெரிக்க உளவுத் துறை

# அருங்காட்சியகத்தில் என்ன உள்ளது?

- கோர்டன் கொரேரா



அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ-வின் அருங்காட்சியகம், உலகின் அசாதாரணமான மற்றும் பிரத்யேக மான அருங்காட்சியகங்களில் ஒன்று. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களால் நிரம்பியுள்ள இந்த அருங்காட்சியகத்தில் பொது மக்களுக்கு அனுமதி கிடையாது.

சதாம் உசேனின் லெதர் ஜாக்கெட்டையும், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட போது அவரிடம் இருந்த துப்பாக்கியையும் இங்கு மட்டும்தான் பார்க்க முடியும்.

வர்ஜீனியாவின் லாங்லியில் உள்ள அமெரிக்க உளவுத்துறை அமைப்பின் தலைமையகத்திற்குள் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகம், அமெரிக்க உளவுத்துறையின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பிபிசி உட்பட சிறிய செய்தியாளர்கள் குழுவினர் பார்வையிட பிரத்யேக அனுமதி வழங்கப்பட்டது.




இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 600 பொருட்களில் ரகசிய தகவல்களைக் கடத்த பயன்படுத்தப்பட்ட எலி பொம்மைகள், கேமராவுடன் கூடிய சிகரெட் பாக்கெட் , உளவு கேமராவுடன் கூடிய புறா, வெடிக்கும் மது பாட்டில்கள் என பனிப் போரில் பயன் படுத்தப்பட்ட பொருட்களும் இருந்தன.

சி.ஐ.ஏ.வின் சமீபத்திய பிரபலமான செயல்பாடுகள் தொடர்பான பொருட்க ளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மேற்கண்ட படத்தில் காட்டப்பட்டிருப்பது, பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் இருந்த வீட்டின் வளாக மாதிரி. இந்த மாதிரியைக் காண்பித்துத்தான், அப்போதைய அதிபர் ஒபாமாவிடம் ஒப்புதல் பெற்று பின்லேடன் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

முப்பரிமாணத்தில் விஷயங்களைப் பார்ப்பது கொள்கை வகுப்பாளர்களுக்கும், தங்கள் வீரர்களுக்கும் பணியைத் திட்டமிட உதவுவதாக அருங்காட்சியகத்தின் இயக்குநர் ராபர்ட் இசட் பையர் கூறுகிறார்.

கடந்த ஜூலை 30ஆம் திகதி ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அல்-கய்தாவின் புதிய தலைவரான அய்மன் அல்-ஜவாஹிரி சி.ஐ.ஏ. தாக்குதலில் கொல்லப்பட்டார்.



மேலே உள்ள படமானது, கடந்த ஜூலை 1ஆம் திகதி அதிபர் ஜோ பைடனிடம் இந்தத் தாக்குதல் பற்றி விளக்க பயன்படுத்தப்பட்ட மாதிரியாகும். அய்மன் அல்-ஜவாஹிரியின் நகர்வுகளை அமெரிக்க உளவுத்துறை பல மாதங்கள் ஆய்வு செய்த பிறகு, தனது வீட்டின் பால்கனியில் நின்றுகொண்டிருந்த அவர் கொல்லப்பட்டார்.

பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரிகள் தாங்கள் தாக்க இலக்கு வைக்கும் நபரின் வாழ்க் கையை எப்படி கவனிக்கிறார்கள் என்பதை இந்த மாதிரிகள் காட்டுவதாக ராபர்ட் இசட் பையர் கூறுகிறார்.

அருங்காட்சியகத்தின் முதல் பாதியில் 1947இல் சி.ஐ.ஏ. தொடங்கப்பட்டதிலிருந்து, 2001 செப்டம்பர் தாக்குதல்கள் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் கவனம் செலுத்துவதற்கான தெளிவான மையமாக மாறியது வரை காலவரிசைப்படி காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நன்கொடையாக வழங்கிய பொருட்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.




சி.ஐ.ஏ.வின் வெற்றியை குறிக்கும் விஷயங்கள் மட்டும் காட்சிப்படுத்தப்படவில்லை. கியூபாவில் ஃபிடல் காஸ்ட்ரோவை அகற்றுவ தற்கான சி.ஐ.ஏ. வேலைத்திட் டம் பேரழிவு தரும் வகையில் படுதோல்வியில் முடிந்தது மற் றும் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கத் தவறியது பற்றிய குறிப்பு களும் இந்த அருங்காட்சியகத்தில் உள்ளன.

“இந்த அருங்காட்சியகம் வரலாற்று அருங்காட்சியகம் மட்டுமல்ல. இது ஒரு செயல்பாட்டு அருங்காட்சியகம். நாங்கள் சி.ஐ.ஏ. அதிகாரிகளை அழைத்து வந்து எங்கள் வரலாற்றின் நல்ல மற்றும் கெட்ட நிகழ்வுகளை அவர்களுக்குக் காட்டி, வரலாற்றை அவர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்கிறோம். இதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சிறப்பாக வேலை செய்ய முடியும். எதிர்காலத்தில் சிறந்து விளங்க வெற்றி மற்றும் தோல்வியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்” என்கிறார் ராபர்ட் இசட் பையர்.

எனினும், ஈரானில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்க்க எம்.16 (பிரிட்டனின் அயல்நாடுகளுக்கான உளவு அமைப்பு) உடனான கூட்டு நடவடிக்கை மற்றும் 2001 சம்பவத்திற்குப் பிறகு சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதியை சித்ரவதை செய்தது போன்ற சி.ஐ.ஏ.வின் சர்சைக்குரிய பக்கங்கள் குறைவாகவே காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

## “எங்களால் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ முடியாது”

அருங்காட்சியகத்தின் இரண்டாம் பகுதி சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களுடன் இருந்தன.

“எங்களால் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ முடியாது“ என்ற சொற்றொடர் உளவுத்துறை நிறுவனங்களைப் பற்றி அறிந்த அனைவருக்கும் நன்கு தெரிந்த ஒன்று. அந்தச் சொற்றொடர் எப்படி உருவானது என்பது அருங்காட்சியகத்தில் விவரிக்கப்பட்ட இதுவரை கண்டிராத பொருட்களைப் பற்றிய கதையில் தெரிந்தது.

1960களின் பிற்பகுதியில், சோவியத் யூனியனின் மு-129 நீர்மூழ்கிக் கப்பல் கடலின் அடிப்பகுதியில் தொலைந்து போனது. அதை அமெரிக்கா கண்டுபிடித்த பிறகு, கோடீஸ்வரரான ஹோவர்ட் ஹியூஸுடன் இணைந்து அதன் சிதைவை மீட்டெடுக்க சி.ஐ.ஏ. முயற் சித்தது. குளோமர் எக்ஸ்ப்ளோரர் என்ற கப்பலைப் பயன்படுத்தி ஹியூஸ், கடலின் அடிப்பகுதியைத் தோண்டவுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த அருங்காட்சியகத்தில் சோவியத் நீர் மூழ்கிக் கப்பலின் மாதிரிகள் உள்ளன. குளோமர் கப்பலுக்குச் சென்ற போது மாறுவேடமிடுவதற்காக சி.ஐ.ஏ-வின் துணை இயக்குநர் அணிந்திருந்த செயற்கையான முடிகளும்கூட காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலே தூக்க முயற்சித்த போது நீர்மூழ்கிக் கப்பலின் பாகங்கள் உடைந்ததால் இந்த முயற்சியானது ஓரளவுதான் வெற்றிபெற்றது. எனினும், சில பாகங்கள் மீட்கப்பட்டன.

“நீர்மூழ்கிக் கப்பலில் அவர்கள் கண்டுபிடித்தவற்றில் பெரும்பாலானவை இன்று வரை வகைப்படுத்தப்பட்டுள்ளன” என்கிறார் ராபர்ட் இசட் பையர்.

நீர்மூழ்கிக் கப்பலை மீட்பதற்கு முன்பாக “ப்ரா ஜெக்ட் அசோரியன்” குறித்து செய்தி வெளியான போது, என்ன நடந்தது என்பதை “உறுதிப்படுத்தவோ மறுக்கவோ முடியாது” என்று கூறுமாறு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. “குளோமர் பதில்“ என அழைக்கப்படும் இந்தப் பதில் மற்றும் இன்றும் பழக்கத்தில் உள்ளது.

ஆர்கோ என்ற போலி திரைப்படத்திற்கு அட்டைப் படத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது 1979 புரட்சிக்குப் பிறகு ஈரானில் இருந்த அதிகாரிகளை மீட்க அனுமதிக்கும் கதை.

இது பின்னர் ஹாலிவுட் திரைப்படமாக எடுக்கப்பட்டது. மீட்புக் குழுவினர் உருவாக்கவுள்ளதாகக் கூறப்பட்ட போலிப் படத்திற்கான போஸ்டரும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே புரிந்துகொள்வதற்கு கடினமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய அருங்காட்சியகத்தின் மேற்கூரையும் பல்வேறு வகையான குறியீடுகளால் மறைக்கப்பட்ட செய்திகளைக் கொண்டுள்ளது.




கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சில பொருட்களை ஆன்லைனில் பார்க்க முடியும் எனத் தெரிவித்த சி.ஐ.ஏ. அதிகாரிகள், அருங் காட்சியகம் குறித்து நிறைய விஷயங்களை மக்கள் தெரிந்து கொண்டதாக இந்தத் தருணம் இருக்கும் என்றும் கூறினர்.

(பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

06) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .....................................................................

ii) ....................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

09) **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

11) **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ........................................................................

ii) old / How / you? / are : ........................................................................ (2 புள்ளிகள்)

14) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...........................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

15) **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

16) | 7 | 8 | / | 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..................................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**20.09.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**20.09.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு வைபவம்

அம்பாறை, செப். 27

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த தீமிதிப்பு வைபவம் நேற்று திங்கட்கிழமை ஆலய பரிபாலன சபைத் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று அதிகாலை முதல் சடங்குகள் இடம்பெற்று காலையில் மஞ்சள் குளித்த தேவாதிகள் 7.30 மணியளவில் தீமிதிக்க ஆரம்பித்தனர்.

பக்தர்களின் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க சுமார் 2ஆயிரம் தேவாதிகள் காலை 9 மணி வரை தீமிதிப்பிலீடுபட்டனர்.

ஆலய பிரதம பூசகர் குமார குலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம்பெற்று வந்தன.

ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் கடந்த17 ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று நேற்று திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைந்தது.

கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை ஸ்ரீகோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நோன்பு கட்டல் சடங்கு இடம் பெற்றது.

இதேவேளை வழமைபோல ஒக்ரோபர் 05 ஆம் திகதி கௌரி விரதம் இடம்பெறும். (அ)

## பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்கள் அறிமுக விழா




திருமலை, செப். 27

மூதூர் - சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா நேற்று முன்தினம் மாலை திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் அறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, Eezha Natiyam, Inniyam & Music & Dance of Eazham Tamilians, கறுப்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் மரபில் சிவாஜி, கணேசனின் நடிப்பு ஈழ நாட்டியம், ஓ தோழனே நந்தினி, நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந்த 9 நூல்களின் அறிமுகம் இடம்பெற்றது.

இந்த நூல்களின் அறிமுக உரையினை ஓய்வுபெற்ற அதிபரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதரன், எழுத்தாளர் கதிர் திருச்செல்வம், எழுத்தாளர் கு.யோகானந்தம், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் க. அன்பழகன், ஆசிரியர் தி.பவித்திரன், எழுத்தாளர் கொட்டியாரன் சிவசங்கரன் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பாரம்பரிய உற்பத்திகள் பல மங்கி மறைந்து வருகின்றன!

### குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டு

அம்பாறை, செப். 27

நவீன உற்பத்திகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு செயற்கைச் சூழலுக்குள் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால், பாரம்பரிய உற்பத்திகள் மங்கி மறைந்து வருகின்றன என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கிராமிய சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் குச்சவெளி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமியக் கைத்தொழில் பொருட்களின் சந்தையும், கண்காட்சியும் நேற்று குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சந்தையுடனான கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நவீன அவசர உற்பத்திகளின் ஆக்கிரமிப்பின் விளைவாக உள்ளூர் கிராம உற்பத்திகளுக்கு தேசிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. தற்போதைய நவீன அவசர உலகில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் இயற்கைக்கு சவால் விடும்படியாகவும், சூழலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிப்பதாகவும் அமைந்திருக்கின்ற போதும் நம்மில் அநேகம் பேர் அவசர உலகப் போக்கில் அதனையே விரும்புகின்றோம்.

நீண்டகாலப் போக்கில் இந்த நவீன உற்பத்திகளால்,



இயற்கைக்கும் தேக ஆரோக்கியத்திற்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை உணர்ந்த ஒரு சாரார் பாரம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், பாரம்பரிய உணவு உற்பத்தியாளர்களின் உணவு உற்பத்திகளை ஊக்குவிக்க அரசும் இன்னும் சில அரச சார்பற்ற சமூக அமைப்புக்களும் உதவிக் கொண்டிருக்கின்றன. இந்த சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நவீன மாயையிலிருந்து விடுபட்டு எமது பரம்பரியத்திற்குள் மீண்டும் நாம் உள்நுழைவதன் மூலம் நாமும் எமது எதிர்கால சந்ததியும் நீடித்து நிலைக்கக் கூடியதான இயற்கைக்கும், கேடு விளைவிக்காத சிறந்த சூழலுக்கும் மாறிவிட பெரும் வாய்ப்பாகும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களான பெண்களுடைய திறமைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகக் கூட இதனைப் பார்க்கும்போது இதற்கென ஒரு தேசிய சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகின்றேன். அதன் மூலமாக கை வினைத் திறனில் ஈடுபட்டுள்ள இந்தக் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்திலே ஒரு சிறந்த நிலைக்குச் செல்ல முடியும். இதனூடாக தமது உற்பத்திகளை அவர்கள் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் சென்று பிரபல்யப்படுத்த வாய்ப்பும் ஏற் படும் - என்றார்.

இக்கண்காட்சியில் பாரம்பரிய உணவு வகைகள், நஞ்சற்ற மரக்கறி மற்றும் தானியங்கள், சிற்றுண்டி மற்றும் முறுக்கு வகைகள், உணவு வகைகள், ஆடைகள், பைகள், மட்பாண்டங்கள், பனையோலை உற்பத்திப் பொருட்கள், பன்பாய்கள், வீட்டு அலங்காரங்கள், தாவர உற்பத்திகள் மற்றும் இன்னோரன்ன பாரம்பரிய உற்பத்திகள் இடம்பிடித்திருந்தன. இந்த சந்தையும், கண்காட்சியும் காலை 9.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் திருமதி மாலினி அசோக்குமார், உதவி பிரதேச செயலாளர் திருமதி பாமா மோகன முரளி உள்ளிட்ட தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும் இன்னும் கிராமியக் கைத்தொழில் உற்பத்தியாளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (அ)

# காரைதீவில் நவராத்திரி விழா!

அம்பாறை, செப். 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் தினமும் மாலை 3.00 தொடக்கம் 5.30 வரை அறநெறி மாணவர்களின் பஜனை இடம்பெறவுள்ளது.

மேலும் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் பேச்சு, கதாப்பிரசங்கம், பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, வயலின் கச்சேரி, வீணை கச்சேரி, உடுக்கிசை என்பனவும் மேடையேறுகின்றன.

எதிர்வரும் 04ஆம் திகதி ஆயுத பூசையும் 05 ஆம் திகதி வித்தியாரம்பமும் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கை நிறுவகத்தின் சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தினால் அடிப்படை சான்றிதழ் பயிற்சிகளுக்கான வித்தியாரம்பம் இடம்பெறும்.

காலை 8.00 மணிக்கு பரதநாட்டியம், பண்ணிசை, கதாப்பிரசங்கம், மிருதங்கம், வயலின், வீணை, சொற்பொழிவு ஆகிய கலைப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க வித்தியாரம்பம் இடம் பெறவுள்ளது.

இதேவேளை போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 01.10.2022 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தோரணம் கட்டுதல், பூமாலை கட்டுதல், பூச்சரம் தொடுத்தல் மறுநாள் 2.10.2022 ஞாயிற்றுக்கிழமை கோலம் போடுதல், நிறை குடம் வைத்தல், சித்திரம் வரைதல்ஆகிய போட்டிகள் நடைபெறும்.

மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் வழிகாட்டலில் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பிலிப்பைன்ஸை தாக்கியது ‘நோரு’!

## மீட்புப் பணிக்கு சென்ற 5 வீரர்கள் பலி

மணிலா, செப். 27

பிலிப்பைன்ஸின் வட கிழக்கு பகுதியை சக்திவாய்ந்த நோரு புயல் தாக்கிய நிலையில் புயல், மழை, வெள்ளத் தில் சிக்கி தவிப்பவர்களை மீட்கும் பணிக்கு சென்ற மீட் புப் பணியாளர்கள் 5 பேர் உயி ரிழந்துள்ளதாக அந்நாட்டு அதி காரிகள் நேற்று திங்கட்கிழமை காலை தெரிவித்துள்ளனர்.

ஞாயிறு மற்றும் திங்கட் கிழமை அதிகாலை லூசோன் புயல் வடகிழக்கு பகுதியின் பிரதான தீவைக் கடந்து சென்றபோது, சூறைக் காற்று டன், பலத்த மழை பெய்தது. இந்தப் புயல் மற்றும் மழை யால் மரங்கள் முறிந்து வீழ்ந்த துடன், தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இந்நிலையிலேயே மீட்புப் பணிகளுக்காக விரைந்த ஐந்து மீட்புப் பணியாளர்கள் உயிரி ழந்தனர். தலைநகர் மணிலா வுக்கு அருகிலுள்ள புலக்கன் மாகாணத்தில் உள்ள சான் மிகு வல் நகராட்சியில் மீட்புப்



பணியாளர்கள் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க முயன்ற போது அவர்கள் மீது சுமார் இடிந்து விழுந்ததாக சான் மிகு வல் பொலிஸ் உயரதிகாரி லெப் டிணன்ட் கேணல்ரோமுவால்டோ ஆண்ட்ரெஸ் கூறினார்.

இதேவேளை, புயல் தாக்கு வதற்கு முன்பு கிட்டத்தட்ட 75,000 மக்கள் தங்கள் வீடுக ளில் இருந்து வெளியேற்றப் பட்டனர். கனமழையால் பாதிக்கப்படக்கூடிய பகுதிக ளில் காட்டாற்று வெள்ளம் ஏற்படலாம், நிலச்சரிவுகள் ஏற்படுவதுடன், பயிர்களும் அழியலாம் என வானிலை நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.

இதுவேளை, புயல், மழை பாதிப்புகள் காரணமாக பிலிப் பைன்ஸ் தலைநகர் மணிலா உள்ளிட்ட பல நகரங்களில் நேற்று திங்கள்கிழமை பள்ளி கள், அரச அலுவலகங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. மணிலா விமான நிலையத்தி லிருந்து புறப்படும் 30 இற்கு மேற்பட்ட விமானங்கள் இரத் துச் செய்யப்பட்டுள்ளன. (அ)



## கனடா வரலாற்றில் பெரும் சேதம் ஏற்படுத்திய ‘பியோனா’ சூறாவளி!

மொன்றியல், செப். 27

கனடா வரலாற்றில் மிகக் கடுமையான சூறாவளிகளில் ஒன்றாகக் கருதப்படும் பியோனா சூறாவளி கனடா வின் கிழக்கு பகுதிகளை தாக்கி யதில் பெரும் அழிவுகள் ஏற் பட்டுள்ளன.

சூறாவளி தாக்கத்தினால் சேதமடைந்த முக்கியமான உள்கட்டமைப்புகளை சீர் படுத்த கனடாவுக்கு பல மாதங் கள் ஆகும் என்று அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தனர்.

புயல் தாக்கத்தில் இலட்சக் கணக்கான வீடுகளில் மின்சா ரம் தடைப்பட்டுள்ளது. பெரு மளவு மரங்கள் சரிந்து வீழ்ந்த தால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பியோனா புயல் கிழக்கு கனடாவை பந்தாடியது. மணிக்கு 179 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று சூழன்றடித் தது. இந்த புயலால் நோவா ஸ்கோடியா, நியூ பிரன்சுவிக், நியூபவுண்ட்லாண்ட் ஆகிய மாகாணங்களும், பிரின்ஸ் எட்வர்ட் மற்றும் மாக்டலின் தீவுகளும் கடுமையாக பாதிக் கப்பட்டன.

அங்கு சூறாவளி காற்றுடன் பலத்த மழை கொட்டித் தீர்த்த தால் பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாகின. குடியி ருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததை தொடர்ந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேற் றப்பட்டு வருகின்றனர்.

இதனிடையே புயலால் கடல் சீற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, கடற்கரையோரத் தில் இருந்த ஏராளமான வீடு கள் கடலில் அடித்து செல் லப்பட்டன. புயல், மழையை தொடர்ந்து பல பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப் பட்டுள்ளதால் 5 இலட்சத்துக் கும் அதிகமான வீடுகள் இரு ளில் மூழ்கி உள்ளன. மேலும் தகவல் தொடர்பு, சாலை போக்குவரத்து உள்ளிட்டவை யும் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு முற்றிலுமாக முடங்கியுள்ளது.

புயல் பாதித்த பகுதிகளில் மீட்பு நடவடிக்கையில் ஈடு பட இராணுவத்தை அனுப்பி யுள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித் துள்ளார்.

மேலும் புயல் பாதிப்பு காரணமாக ஜப்பான் முன் னாள் பிரதமர் ஷின்சோ அபே யின் நினைவு நிகழ்ச்சியில் பங்கேற்க ஜப்பான் செல்ல இருந்த பயணத்தை அவர் இரத்து செய்துள்ளார்.

நியூபவுண்ட்லாண்ட் தென் மேற்கு முனையில் 4,000 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர் களை கொண்ட மிகக் கடுமை யாக பாதிக்கப்பட்ட நகரங்க ளில் ஒன்றான போர்ட் ஆக்ஸ் பாஸ்க்ஸில் புயலின் போது 73 வயதான பெண் ஒருவர் உயிரி ழந்தாக பொலிஸார் தெரிவித் தனர்.

அந்தப் பெண் கடைசியாக அவரது குடியிருப்புக்குள் காணப்பட்டார். சில நிமிடங் களுக்கு முன்பு ஒரு அலை அவரது வீட்டை தாக்கியது. இதனால் அடித்தளத்தின் ஒரு பகுதியைக் சேதமடைந்தது என பொலிஸார் கூறினர்.

கடலோரக் காவல் படை மற்றும் உள்ளூர் மீட்புப் படையினர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அவரது உடலை கடலில் இருந்து மீட்டதாக பொலி ஸார் குறிப்பிட்டனர். (அ)

## பங்களாதேஷ் கொரோட்டா நதியில் படகு கவிழ்ந்து 24 பேர் உயிரிழப்பு!

### 80 பேரைக் காணவில்லை

டாக்கா, செப். 27

பங்களாதேஷில் பக்தர்களை ஆலயத்துக்கு ஏற்றிச்சென்ற படகொன்று கொரோட்டா நதி யில் கவிழ்ந்ததில் அதிலிருந்த 24 பேர் நீரில் மூழ்கிப் பலியாகினர். 70 முதல் 80 பேர் காணா மல் போயுள்ள நிலையில் அவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

பங்களாதேஷ் - பஞ்சகர் மாவட்டத்தில் பல நூற்றாண்டுகள் பழைமையான பிரசித்தி பெற்ற போதேஸ்வரி கோயிலுக்கு நவராத்திரி விழா தொடக்கத்தை முன்னிட்டு இந்து பக்தர்களை ஏற்றிச் சென்றபோதே நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை படகு நதியில் கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

இந்த விபத்தில் பலியான 24 பேரில் 8 குழந்தைகள், 12 பெண்களும் அடங்குகின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கும் அதிகமான பக்தர்கள் படகில் பயணித்ததன் காரணமாக, இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரி வித்தனர். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பங்களா தேஷ் ஜனாதிபதி அப்துல் ஹமீத், பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ள னர்.

அளவுக்கு அதிகமானோர் பயணிப்பதால் படகுகள் கவிழ்ந்து உயிரிழப்பு ஏற்படுவது வங்க தேசத்தில் அடிக்கடி நிகழ்ந்து வருகிறது. கடந்த மே மாதம் ஏராளமான மக்களை ஏற்றிக் கொண்டு பத்மா நதியில் பயணித்த படகு ஒன்று, மணல் ஏற்றி வந்த படகுடன் மோதி விபத்துக்குள்ளான தில் 26 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக் கது. (அ)

# அமெ. துணை ஜனாதிபதி தென்கொரியாவுக்கு செல்ல முன் வடகொரியா ஏவுகணை சோதனை

பியொங்யாங், செப். 27

வடகொரியா அதன் கிழக்கு கடற் கரையில் நேற்றுமுன்தினம் பாலிஸ்டிக் ஏவுகணை ஏவி சோதனை நடத்தியது. ஜூன் மாதத்திற்கு பின்னர் வட கொரியா மேற்கொண்ட மற்றொரு ஏவுகணை சோதனையாக இது அமைந்துள்ளதாக தென் கொரிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற் காக ஓர் அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் தென் கொரியாவிற்கு வந்துள்ள நிலையிலும் அமெரிக்க துணை ஜனாதி பதி கமலா ஹரிஸ் இந்த வாரம் தென் கொரியா செல்ல இருக்கும் நிலையிலும் வடகொரியா நேற்று முன் தினம் ஏவுகணையை ஏவி சோதித்தது.

வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனை கடுமையான ஆத்திரமூட்டும் செயல் என தென்கொரியா தெரிவித் துள்ளது.

பியொங்யாங்கிற்கு வடக்கே 100 கி.மீ. தொலைவில் உள்ள டேச்சோ னுக்கு அருகில் நேற்று முன் தினம் உள்ளூர் நேரப்படி 07:00 மணிக்கு ஒரு குறுகிய தூர ஏவுகணை ஏவப்பட்ட தைக் கண்டறிந்ததாக தென் கொரியா வின் இராணுவம் கூறியது. 60 கிலோ மீட்டர் உயரத்தில் சுமார் 600 கிலோ மீறறர் வேகத்தில் இந்த ஏவுகணை பறந்ததாக அது தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் அச்சுறுத்தல் களை எதிர்கொள்ள எங்கள் இராணு வம் முழு தயார் நிலையில் உள்ளது.



கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வை வலுப்படுத்தும் அதே வேளையில் அமெரிக்காவுடன் நெருக்கமாக ஒத்து ழைத்து செயற்பட்டு வருகிறோம் என தென்கொரிய அரசு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜப்பானின் கடலோர காவல்படையும் ஏவுகணை சோதனை இடம்பெற்றதை உறுதி செய்துள்ளது டன், தங்கள் கடற்படைக் கப்பல்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்தது.

வடகொரியாவின் ஏவுகணை அதிக பட்சமாக சுமார் 50 கி மீ உயரத்தை எட்டியது. வட கொரியாவின் கிழக்கு கடற்கரை மற்றும் ஜப்பானின் பிரத் யேக பொருளாதார மண்டலத்திற்கு வெளியே உள்ள நீர்நிலைகளில் அது விழுந்தது என ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் யசுகாசு ஹமாடா தெரிவித்தார். (அ)



# டிராவிட்டை பின்தள்ளி கோலி புதிய சாதனை!

ஹைதராபாத், செப். 27

இந்திய கிரிக்கெட்டின் நட்சத்திர வீரர் விராட் கோலி, தலைமை பயிற்றுநர் ராகுல் டிராவிட்டை முந்தி புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்திய அணிக்காக 102 டெஸ்ட், 262 ஒருநாள் மற்றும் 107 இருபது - 20 போட்டிகளில் விளையாடி உள்ளார் கோலி. இதன் மூலம் மொத்தம் 24,078 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 71 சதங்கள் மற்றும் 125 அரைச் சதங்களை அவர் பதிவு செய்துள்ளார். நவீன கிரிக்கெட்டின் மகத்தான வீரராகவும் போற்றப்பட்டு வருகிறார். அவர் விளையாடும் ஒவ்வொரு போட்டியும் சாதனை தடங்களாக அவருக்கு அமைந்துள்ளன.

இந்நிலையில், ஹைதராபாத் நகரில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது இருபது -20 போட்டியில் கோலி, 48 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதன் மூலம் இந்திய அணியின் தலைமை பயிற்றுநரான டிராவிட், சர்வதேச கிரிக்கெட்டில் எடுத்த ஓட்டங்களை காட்டிலும் கூடுதலாக 14 ஓட்டங்கள் எடுத்துள்ளார் கோலி. டிராவிட் மொத்தம் 404 போட்டிகளில் விளையாடி 24,064 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இந்திய அணிக்கு அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில், சச்சின் டெண்டுல்கர் - 34,357 ஓட்டங்கள் - 64 போட்டிகள், விராட் கோலி - 24,078 ஓட்டங்கள் - 471 போட்டிகள், ராகுல் டிராவிட் - 24,064 ஓட்டங்கள் - 404 போட்டிகள், கங்குலி - 18,433 ஓட்டங்கள் - 421 போட்டிகள், எம். எஸ். டோனி - 17,092 ஓட்டங்கள் - 535 போட்டிகள் (ஐ)

# கொரியா ஓப்பன் ரென்னிஸ் அலெக்சாண்ட்ரோவா சம்பியன்!



சியோல், செப். 27

கொரியா ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை அலெக்சாண்ட்ரோவா வெற்றி பெற்று 'சம்பியன்' பட்டத்தை கைப்பற்றினார்.

கொரியா ஓப்பன் பெண்கள் சர்வதேச ரென்னிஸ் போட்டி சியோலில் நடந்தது. இதில் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 24ஆவது இடம் வகிக்கும் ரஷ்யாவின் எகதேரினா அலெக்சாண்ட்ரோவா 7-6 (7-4), 6-0 என்ற நேர் செற்றில் முன்னாள் சம்பியன் ஜெலினா ஆஸ்டாபென்கோவை (லாத்வியா) தோற்கடித்து பட்டத்தை வசப்படுத்தினார்.

தனது 3ஆவது சர்வதேச பட்டத்தை கையில் ஏந்திய 27 வயதான அலெக்சாண்ட்ரோவாவுக்கு ரூ.27 135 இலட்சம் (இலங்கை) ரூபாய் பரிசுத்தொகை கிடைத்தது. (ஐ)

# அதிக போட்டிகளை வென்று இந்திய அணி புதிய சாதனை!



ஹைதராபாத், செப். 27

அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்திய அணி பெற்ற வெற்றி அந்த அணியின் 21ஆவது இருபது - 20 போட்டி வெற்றியாகும்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சென்று 3 போட்டி கள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதில் இரண்டாவது போட்டியில் வென்றதன் மூலம் இந்தியா சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வருடத்தில் அதிக வெற்றிகளை பதிவு செய்த பாகிஸ்தானின் உலக சாதனையை சமன் செய்திருந்தது.

பாகிஸ்தான் அணி கடந்த வருடம் 20 இருபது - 20 போட்டிகளில் வெற்றிகளை பெற்று இருந்ததே ஓர் அணி ஒரு வருடத் தில் பெற்ற அதிக இருபது - 20 போட்டி வெற்றிகளாகும். இந்த நிலையில் தற்போது ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி அந்த சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளது. இந்த வருடம் விளையாடியுள்ள 28 இருபது - 20 போட்டிகளில் இந்திய அணியின் 21ஆவது வெற்றி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இங்கிலாந்து அணியை வீழ்த்தியது பாகிஸ்தான்!

கராச்சி, செப். 27

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது இருபது - 20போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 7 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 3 போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. 3 போட்டிகளின் முடிவில் 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் தொடரின் 4ஆவது ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதன்படி பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் சார்பில் முதலாவதாக களமிறங்கிய முகமது ரிஸ்வான் மற்றும் அணித் தலைவர் பாபர் அஸாம் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்டத்தை உயர்த்தினர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி



நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ரிஸ்வான் 88 (67) ஓட்டங்களும், பாபர் அஸாம் 36 (28) ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து அணியின் சார்பில் அதிகபட்சமாக டாப்லே 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணியின் சார்பில் பிலிப் சால்ட் மற்றும் ஹேல்ஸ் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர்.

பாகிஸ்தான் அணியின் சிறப்பான பந்து வீச்சால் சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்தன. இருந்த போதும் இங்கிலாந்து அணியின் டுக்கெட் 33 ஓட்டங்களும், பூருக் 34 ஓட்டங்களும் எடுத்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் மொயின் அலி 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கி அதிரடி காட்டிய டேவ்சன் 34 (17) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் அடில் ரஷித் 3 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

முடிவில் இங்கிலாந்து அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 163 ஓட்டங்கள் எடுத்தது.

பாகிஸ்தான் அணியின் சார்பில் அதிகபட்சமாக முகமது நவாஸ் மற்றும் ஹறிஸ் ரூப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும், ஹூஸ்நைன் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதன்மூலம் இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது இருபது - 20போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

(ஐ)

# என் மீதான விமர்சனத்தை கருத்தில் எடுக்கமாட்டேன்

## ஞானசாரர் கூறுகிறார்



கொழும்பு, செப். 27

சவுதி அரேபியாவின் தேசிய தின நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறித்து சமூக ஊடகங்களில் வெளியாகும் விமர்சனங்களை கருத்தில் எடுக்கப்போவதில்லை என பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தன்னை பற்றி வெளியாகியுள்ள முகநூல் பதிவுகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், எவரும் கேலி செய்யலாம். விமர்சிக்கலாம். அவர்களை பற்றி யாருக்கு கவலை இல்லை.

போதியளவிற்கு விமர்சித்துவிட்டோம், கேலி செய்துவிட்டோம் என அவர்கள் நினைக்கும்போது அவர்கள் அதனை நிறுத்திவிடுவார்கள்.

இந்த நாட்டு மக்களுக்கு விமர்சனத்துடன் கேலி செய்ய மாத்திரம்தான் தெரியும்-என்றார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துக்களை கொண்டுள்ள ஞானசார தேரர் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் சவுதி அரேபியாவின் தேசிய தின நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

இதனை தொடர்ந்து அவர் குறிப்பிட்ட நிகழ்வில் கலந்து கொண்டதை விமர்சித்து கேலியான பதிவுகள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அவரை அழைத்தமை நாட்டின் முஸ்லிம்களை அவமரியாதை செய்தமைக்கு சமமானது என முகநூலில் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை தாமதப்படுத்தமாட்டோம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவா கருத்து

கொழும்பு,செப்.27

**தேர்தல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதாகக் கூறி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதைத் தேர்தல் ஆணையகம் தாமதப்படுத்தாது என்றும், 2022ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இளைஞர் பட்டியலை இணைத்து, உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியை நவம்பரில் அறிவிக்க எதிர்பார்ப்பதாகவும் அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் ஆணைக்குழு பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரிக்குள் 18 வயதை நிறைவு செய்யும் இளைஞர்களின் புதிய விண்ணப்பங்களை வருடாந்த வாக்காளர் பதிவேடுக்கான துணைப் பட்டியலில் சேர்க்கும். 2022 ஆம் ஆண்டுக்கான பொதுவான வாக்காளர் பதிவேட்டை அக்டோபர் 31 ஆம் திகதிக்குள் புதிய வாக்காளர் பட்டியலுடன் இறுதி செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் பெப்ரவரி முதல் செப்டம்பர் வரை 18 வயது பூர்த்தியான புதிய விண்ணப்பதாரர்களின் மற்றுமொரு பட்டியலைத் தயாரிப்போம். இந்த பட்டியல் உட்பட 2022 ஆம் ஆண்டுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் நவம்பர் நடுப்பகுதியில் தயாராகிவிடும். எனவே, நவம்பர் மாத இறுதியில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கும் நிலையில் இருக்கும்.

எதிர்வரும் தேர்தலுக்கு முன் தேர்தல் சீர்திருத்தங்களை உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் இணைத்தால் நல்லது. ஆனால் உள்ளூராட்சி தேர்தலை சரியான நேரத்தில் நடத்த தடையாக இருக்க முடியாது.

தேர்தல் சீர்திருத்தங்கள் நடைமுறையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், 2023 மார்ச்சுக்கு முன் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தின்படி செப்ரெம்பர் 20ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் உள்ளூராட் சித் தேர்தலை அறிவிக்க தேர்தல் ஆணையகத் திற்கு அதிகாரம் உள்ளது. எனவே, உள்ளூராட்சி தேர்தலை ஒரு நாள் கூட தாமதப்படுத்தும் எண்ணம் தேர்தல் ஆணையத்திற்கு இல்லை.

பாராளுமன்றத்தில் தேர்தல் சீர்திருத்தங்கள் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படாவிட்டால், 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டபோது பயன்படுத்தப்பட்ட தேர்தல் விதிமுறைகள் மற்றும் சட்ட வழிகாட்டலின் கீழ் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் தயாராக உள்ளது-என்றார். (அ)



# தியாகி திலீபன் நினைவாக நல்லூரில் சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் திலீபன் உருவப்படத்துக்கு வர்ணம் தீட்டும் போட்டி இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வில் பல சிறுவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இதில் தியாக தீபம் திலீபனின் அச்சுப்பதிக்கப்பட்ட உருவத்துக்கு சிறார்கள் வர்ணம் தீட்டினர்.

மேற்படி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தியாகி திலீபன் மறைந்த நாளான நேற்று பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ)

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தியாக தீபத்தின் நினைவேந்தல்!

மட்டக்களப்பு, செப். 27

தியாக தீபம் திலீபனின் 35 ஆவது நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் உணர்வாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தியாக தீபம் திலீபன் உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணிக்கு அவரின் திருவுருவப் படத்துக்கு மாவீரர் ஒருவரின் தாயார் ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்.



இதனைத் தொடர்ந்து நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து பூ தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (அ)

# கௌரவமான அரசியல் தீர்வைக் கோரி 57 ஆவது நாள் கவனவீர்ப்பு மன்னாரில்



மன்னார், செப். 27

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 57 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் மாந்தை சந்தி பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இணையத்தின் ஒழுங்கமைப்பில் அதன் மாவட்ட இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் இடம்பெற்றது.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்“ எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 57 ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னாரில் இடம்பெற்றது.

இளைஞர்கள், பொது மக்கள்,சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

## தாயகமெங்கும்...

தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நல்லூரில் - அவரின் நினைவுத் தூபி அருகே பிரதான நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. திலீபன் நினை வேந்தலின் முதல்நாளில் இடம்பெற்ற குழப்பங்களை தொடர்ந்து ஏற்படுத்தப் பட்ட பொதுக் கட்டமைப்பே நினை வேந்தலை நடத்துவது என்று ஏற்பாடா கியிருந்தது. எனினும், நேற்று அதிகாலை முதலே திலீபன் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியை கஜேந்திரகுமார் தலை மையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இந்நிலையில், பொதுக் கட்டமைப்பு குழுவினர் அந்தப் பகுதியில் குழப்பங்கள் வேண்டாம் என்று தெரிவித்து அமைதியாக பந்தலில் அமர்ந்தனர். நினைவுத் தூபிக்கு அஞ்சலிக்க சென்ற யாழ். மாவட்ட குருமுதல்வர் ஜே. ஜெபரட்ணம் அடிகளார், வேலன் சுவாமி போன்றவர்களையும் அவர்கள் உட்செல்ல அனுமதிக்கவில்லை. இதேநேரம், பொதுச் சுடர் ஏற்றப்படும்வரை முன்னணியினர் அல்லாத எவரையும் தூபி அருகே செல்ல விடாது அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் தடுத்து நின்றனர்.

திலீபன் தனது உயிரை ஈகை செய்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்படுவதற்கு தயாராக வைக்கப்பட்டது. இந்நிலையில், 10. 40 மணியளவில் முன்னாள் போராளிகள் தூக்குக் காவடி எடுத்து நினைவுத் தூபி அருகே வந்தனர். அவர்கள் அங்கு தமது சம்பிரதாயங்களை மேற்கொள்ளவோ, இறங்கவோ அனுமதிக்கப்படவில்லை. பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின்னரே அவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று கஜேந்திரகுமார் அணியை சேர்ந்தவர்கள் கூறவே, இதையடுத்து அங்கு நின்றிருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்த அமளிகளை முடிவுக்கு கொண்டுவரவும் - தமது கட்டுப்பாட்டை உறுதி செய்யவும் குறித்த நேரத்துக்கு முன்னதாகவே பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

பொதுச் சுடரை முன்னாள் போராளியான போரில் இரு கைகளையும், கண்களையும் இழந்த முன்னாள் போராளியான சேகரட்ணம் ராகவன் ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து அவர் தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில், நிலைமை சுமுகமடைந்த நிலையில், தூக்குக் காவடி எடுத்தவர்களை பொதுச் சுடர் எரிந்து நிறையும்வரை காத்திருக்க வேண்டும் அதை சற்றும் தள்ளி வைக்க முடியாது என்று கஜேந்திரகுமார் அணியின் செயல் பாட்டாளர் ஒருவர் கூறினார். இதைய டுத்து, அதனை அங்கிருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியை சேர்ந்த ஒருவர் சற்று தள்ளி வைக்க முயன்றபோது இழு பறி ஏற்பட்டது. இதில் முன்னணியை சேர்ந்தவரின்மீது கொதிஎண்ணெய் பறந்து அவர் காயத்துக்கு இலக்கானார். எனினும், சற்று நேரத்தில் பதற்றம் தணிந்து நிலைமை சுமுகமானது.

இந்தக் குழப்பநிலைமைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமைதி யாகப் பார்த்தவாறு நின்றார். அவர் தனது ஆதரவாளர்களை கட்டுப்படுத் தவோ அல்லது மற்றைய கட்சியினரை அழைத்து நிகழ்வை இணைந்து நடத் தவோ கூறவில்லை. தொடர்ந்து அவர் அஞ்சலி செலுத்தினார். இதைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் அவர் அங்கிருந்து சென்றார்.

இதன் பின்னரே, அங்கு நின்ற ஏனையவர்கள் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். இதேநேரத்தில், தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து தன்னுயிரை ஈகை செய்த நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதியிலும் மாவீரர் ஒருவரின் தந்தையால் தீபம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதான நிகழ்வு தவிர, வேலணை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஊரெழு, கிளிநொச்சி, முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மற்றும் பல இடங்களிலும், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு காந்தி பூங்கா, கொக்குவில் ஆகிய இடங்களிலும் அம்பாறை - பொத்துவில் ஆகிய இடங்களிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அலுவலகங்களிலும் தியாகி திலீபனின் நினை வேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட் டன. (ஐ)

## சிறுநீரக...

660 மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், மாத்தளை, பதுளை மாவட்டங்களில் நடமாடும் ஆய்வு கூடங்களுடன் கூடிய வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சிறுநீரக நோய் பரவுவதை தடுக்கும் நோக்கில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான திட்டத்தின் கீழ் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் ஆய்வுகூட வாகனங்களில் சீனாவினால் பயிற்சியளிக்கப்பட்ட இலங்கை சுகாதார ஊழியர்கள் பணிபுரிகின்றனர். (ஐ)

## கொழும்பிலும்...

சமூக சமய நிலையத்தில் அருட்தந்தை யர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், தியாகி திலீபனின் கோரிக்கைகள் மற்றும் அந்தக் கோரிக்கைகள் முன்னோக்கி நகர்த்தப்பட வேண்டிய அவ சியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. (ஐ)

## ஈரான்...

னார். இதன்போதே இத்தகைய உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான ஏற்பாடுகளை இறுதிசெய்ய அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பிலுள்ள தனது நாட்டின் தூதுவருக்கு அறிவுறுத்துவதாக இதன்போது ஈரான் பிரதமர் உறுதியளித்தார்.

ஈரான் அரசாங்கத்திடம் நேரடியாக எரிபொருளை வாங்குவதால், இடைத்தரகர்கள் இல்லாமல் பரிவர்த்தனை செய்ய முடியும். இது இலங்கைக்கு நன்மை பயக்கும் என்று அலிசப்ரி கூறினார்.

இதேவேளை, அமெரிக்கா விதித்த பொருளாதார தடையால் ஈரானுடனான வர்த்தகம் தடைப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# “பன்மைத்துவ நாடாக இலங்கை மாற புலம்பெயர் மக்கள் உதவ வேண்டும்!”

சிட்னி, செப். 27

இலங்கை பன்மைத்துவ நாடு என்ற நிலைக்கு சட்டப்படி மாறுவதிலேயே அதன் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மீட்சி இருப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களுடனான சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

இலங்கையில் நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது, அதற்கு ஆதரவாக உலகெங்கிலும் வாழும் புலம்பெயர் சிங்கள மக்களும் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். இதேபோன்று இலங்கை ஒரு பன்மைத்துவ நாடாக சட்டபூர்வமாக மாறுவதற்கும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் உதவ வேண்டும் என்றும் கோரினார். (ஐ)

## பௌத்த...

அட்மிரல் சரத் வீரசேகர.

குருந்தூர்மலை பௌத்தர்களுடையது - அதனைப் பாதுகாப்போம் என்று கொழும்பில் அவர் பிக்குகள் மற்றும் சிங்கள தீவிரசெயல்பாட்டாளர்களையும் கூட்டி நடத்திய ஆர்ப்பாட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பௌத்த நாட்டில் பௌத்த மத பாரம்பரிய அடையாளங்கள் மற்றும் உரிமைகளை பாதுகாப்பது சிங்களவர்களின் கடமை மாத்திரமல்ல இலங்கையில் வாழும் அனைவரின் கடமையாகும். 2000 வருட கால பழமை வாய்ந்த குருந்தூர்மலையில் பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாப்பது அவசியமானது.

பழமை வாய்ந்த குருந்தூர் மலை விகாரையினை புனரமைத்து பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபட ஒருசில இனவாதிகள் இடமளிக்கவில்லை. இது முற்றிலும் வெறுக்கத்தக்க செயல்பாடாகும். குருந்தூர் மலையில் பௌத்த மத மரபுரிமைகள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்த போது கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்றன. வீதியில் தேர் ஊர்வலம் சென்றன. சிங்களவர்களுக்கு பொறுமையுண்டு. நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குருந்தூர்மலையில் பௌத்த மத வழிபாடுகளுக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமைக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் வெட்கப்பட வேண்டும்.

திருகோணேச்சரம் ஆலயத்தில் வளாகத்தில் உள்ள கடைகளை அகற்றுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்துகிறார்கள். நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு முன்பாக முஸ்லிம், தமிழ் சமூகத்தினர் கடைகளை வைத்துள்ளார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இனவாதம் பேசிக் கொண்டு இனங்களுக்கிடையில் பிரச்னைகளை தோற்றுவிக்கிறார்கள். கூட்டமைப்பினர் இனவாத செயல்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## புதிய..

ஸ்தாபக தலைவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் 63ஆவது நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. அங்கு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடந்து பேசுகையில் கூறியதாவது:

‘நாட்டில் தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு முற்போக்கான கட்சிகளை இணைத்துக் கொண்டு புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்க எதிர்பார்த்துள்ளோம். அந்த கூட்டணியின் ஊடாக மக்கள் சார்பான அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதே எமது இலக்காகும். அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தியவர்களிடமே அதற்கான காரணத்தையும் கேட்க வேண்டும். இவை சிறந்த விடயங்கள் அல்ல. இவ்வாறான செயல்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடும் போது மக்களின் எழுச்சியும் அதிகரிக்கும். இன்று காணப்படும் பிரச்னைகள் எனது ஆட்சி காலத்தில் இருக்கவில்லை.

எம்மால் பரிந்துரைக்கப்பட்ட சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதற்கான அறிகுறி எங்கும் தென்படவில்லை. அது தொடர்பில் நாம் மிகுந்த கவலையடைகின்றோம். பண்டார நாயக்கவும், சிறிமாவோ பண்டார நாயக்கவும் முற்போக்கான கட்சிகளை இணைத்துக் கொண்டே கூட்டணியை அமைத்தனர். அந்த கொள்கையே எமக்குள்ளும் காணப்படுகிறது.

நாம் முதலாவதாக தேசிய பேரவையை அமைத்து அதன் பின்னரே ஏனைய நடவடிக்கைகளை முன்னெ டுக்குமாறு கூறினோம். ஆனால் இவர் கள் அதற்கு முரணாக இறுதியாகவே தேசிய சபையை அமைத்துள்ளனர். அவ்வாறிருக்கையில் எவ்வாறு அதில் இணைவது? எவ்வாறிருப்பினும் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் தீர்மானங் கள் எடுக்கப்படின் எம்மால் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் - என்றார்.

## மதுபான...

டுள்ள பொருளாதார நெருக்கடியால் மதுபான விலைகளும் உயர்ந்துள்ளன. இதனால், தினமும் மதுபானத்தை வாங்க முடியாததால் அவர் ஓடிக்கொலனை வாங்கி குடித்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்குள் மயங்கி விழுந்து அவர் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ. எம். எவ்வின்...

நிதி தொடர்பான உத்தரவாதங்கள் இன்னமும் கிடைக்காததால் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழு இலங்கைக்கு நிதி உதவியை வழங்குவதற்கான அனுமதியை வழங்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைப்பதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கடன் வழங்கியவர்களுடன் கொள்கை ரீதியில் உடன்பாடு எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுதொடர்பான பேச்சுக்கள் அடுத்த வருடத்தின் இரண்டாவது காலாண்டு வரை தொடரும். அதன் பின்னரே மீள் பேச்சுக்கு உட்படுத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் சட்டபூர்வமாக செயல்படுத்தப்படும். என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு புதியவை அல்ல!

## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, செப். 27

**போராட்டங்களை நடத்தி மக்கள் துன்புறுத்தப்பட்டால் பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

**அத்தோடு, உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு நேற்று அறிமுகம் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.**

பாதுகாப்பு அமைச்சின் விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்த பிரச்னையும் இல்லை. போராட்டங்கள் நடத்தலாம். கூட்டங்கள் நடத்தலாம். ஆனால் சட்ட முறைப்படி அந்த கூட்டங்களுக்கு முன் அனுமதி பெற வேண்டும்.

ஒரு கிராமத்தில்கூட ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அந்தந்த பொலிஸ் நிலையங்களில் எழுத்து பூர்வ அனுமதி பெறவேண்டும்.

அன்றாட வாழ்க்கையை துன்பகரமானதாக மாற்றும் விடயங்களை எல்லோரும் விரும்புவதில்லை. எனவே, அதையெல்லாம் பரிசீலித்து பொலிஸார் அந்த அனுமதியை வழங்குகின்றனர்.

திடீர் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை பொலிஸாருக்கு உள்ளது. தேவை ஏற்பட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவ பாதுகாப்புப் படைகள் தயாராக உள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு நேற்று அறிமுகம் செய்யப்படவில்லை. காலங்காலமாக வரும் சில சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் விடயங்கள் இவை.

கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகம் சுற்றி வளைக்கப்பட்டது. அரசு அதிகாரிகள் அங்கு தங்கள் பணிகளைச் செய்ய முடியவில்லை.

அவ்வாறான இடையூறுகள் ஏற்பட்டால் அவ்வாறான இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும். முந்தைய நிலை மீண்டும் ஏற்படக்கூடாது.

அதனால்தான் கொழும்பின் பெருநகரில் சில இடங்களை மட்டும் உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி உத்தரவின் மூலம் நியமித்துள்ளோம்-என்றார். (அ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் திலீபனுக்கு நேற்று அஞ்சலி





யாழ்ப்பாணம், செப். 27

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்றுக் காலை பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள திலீபனின் நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டது.

இதன்பொழுது பொதுச்சுடரேற்றப்பட்டு மாணவர்கள் ஈகச் சுடரேற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதில் யாழ்.பல்கலைகக்கழக மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தினர், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# காற்றாலை திட்டங்களில் முதலிட ஆர்வம் காட்டுகின்றது இந்தியா!

கொழும்பு, செப். 27

நாட்டின், வடமேற்கு பிரதேசத்தின் காற்றாலை ஆற்றல் திட்டங்களில் முதலீடு செய்ய இந்திய நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளதாக இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் வினோத் கே ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

பல இந்திய நிறுவனங்கள் இந்த திட்டங்களில் ஆர்வமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தாலும் அந்த நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் காற்றாலை ஆற்றல் திட்டங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என்பது நன்கு அறியப்பட்டதாகும்.

இந்தநிலையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்பது இந்திய மற்றும் இலங்கை வெளிநாட்டு உறவுகளில் குறிப்பிட்ட கவனம் செலுத்தும் ஒரு பகுதியாகும் என்று இராஜதந்திர தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்கு இந்தியா உட்பட பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதை இலங்கை அரசாங்கமும் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# போசாக்கு பிரச்னைகளை கண்டறிய கணக்கெடுப்பு

கொழும்பு, செப். 27

மக்களின் போசாக்கு பிரச்னைகளை கண்டறிய நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பு நடத்துமாறு சுகாதார அமைச்சர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமீப நாட்களாக குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த தகவல் உண்மையா என்பதை உறுதி செய்வதற்காக இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்த கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ)

# டீசல் தாங்கி கடத்திய இருவர் ஹந்தானை பகுதியில் கைது!

கொழும்பு, செப். 27

கண்டி - ஹந்தானை பகுதியில் வைத்து டீசல் தாங்கி ஒன்றை கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து ஹந்தானை நோக்கி டீசலை காவிச்சென்ற தாங்கியை அதிகாலை இரண்டு மணியளவில் ஹந்தானைச் சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் கடத்தியுள்ளனர்.

ஓட்டோவில் வருகை தந்த நால்வர் தாங்கியை இடைமறித்து நிறுத்தியதோடு சாரதி மற்றும் நடத்துநரை தாக்கிவிட்டு கடத்தி சென்றுள்ளனர்.

இந்நிலையில் 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சந்தேக நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர். (அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் ஜெனிவாவில் முதல் தடவையாக முன்வைப்பு!

ஜெனிவா, செப். 27

“இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது. உதாரணமாக அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணம், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், 3 தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியது. இந்தப் பிரச்னையை ஐ.நா. மாநாட்டில் பதிவு செய்கிறேன்.”

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன் ஜெனீவாவில் இடம் பெற்ற 51 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை தொடர்பான ஆரம்ப தீர்மானம், 19/2 (2012 மார்ச்) மற்றும் 22/1 (2013 மார்ச்) இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் வகையில் பெயரிடப்பட்டது.

எவ்வாறாயினும், 25/1 (2014 மார்ச்) தீர்மானத்தின் பின்னர், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது என தீர்மானம் மறுபெயரிடப்பட்டது.

முழு தீவின் மனித உரிமைகள் ஐக்கிய நாடுகளாலும் இந்த சபையாலும் பேசப்படவேண்டும் என்பதை தமிழ் மக்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆனால், இனப்படுகொலைக்கான சர்வதேச பொறுப்புக்கூறலானது சபைக்கு வெளியே இலங்கையில் அல்லது ஒரு ஓரத்தில் அது நடக்கக்கூடாது.

மேலும், இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது.

உதாரணமாக அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணம், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், 3 தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியது. இந்தப் பிரச்னையை ஐ.நா.மாநாட்டில் பதிவு செய்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தாயகத்தில் கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையை எதிர்கொள்கின்றனர். மனித உரிமைகள் பேரவையின் தீர்மான செயல்முறையானது சர்வதேச குற்றங்களின், குறிப்பாக இனப்படுகொலை குற்றங்களின் பொறுப்புக்கூறலில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் - என்றார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.